Registered as a news paper.
இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து
விலை: ரூபா 6.00

**போட்டோ வீடியோ**



நவீன டிஜிட்டல் கமரா மூலம்
சிறந்த முறையில் படப்பிடிப்பை
மேற்கொள்ள

**மலரும் மலர்கள்**

உங்கள் மறக்கமுடியாத இனிய கணங்கள்
எங்கள் கமராவின் சிறந்த காவியங்கள்

சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம்.


டிப்போ வீதி,
கிளிநொச்சி.

சி/672

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 மாசி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 முஹறம் 09 (13.03.2003) வியாழக்கிழமை இதழ் :161



கண்காணிப்புக்குழு - விடுதலைப் புலிகள் சந்திப்பு

## தற்போதைய சூழ்நிலையை விளக்க போராளிகள் வன்னிக்கு அழைப்பு!

எமது இராணுவ, அரசியல் நிலையை போராளிகளுக்கு விளக்கவும், அவர்களின் பாதுகாப்புக் கருதியுமே நாம் எமது போராளிகளை வன்னிக்கு மீள அழைத்துள்ளோம் என, கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

குடாநாடு உட்பட சில பகுதிகளில் இருந்து விடுதலைப் புலிப் போராளிகள் வன்னிக்கு மீள அழைக்கப்பட்டது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

எமது போராளிகளை வன்னிக்கு திருப்பி அழைப்பதில் இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று தற்போது நெருக்கடியான சூழ்நிலை உள்ளது. இதனால் போர் மூளும் என நாம் கருதவில்லை. எமது மக்கள் போர் ஏற்படும் என அஞ்சத் தேவையில்லை. விடுதலைப் புலிகள் போர் நிறுத்தத்தை மீறுவதில்லை என்பதில் உறுதியாக உள்ளனர்.

எனினும் - இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள எமது போராளிகளை அழைத்தது - ஒன்று எமது அரசியல் இராணுவ நிலையை அவர்களுக்கு விளங்கச் செய்யவும், மற்றது - (10 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சைத் தற்காலிகமாக நிறுத்தலாமா? புலிகள் தரப்பு யோசித்து வருகின்றது!

## எதிர்ப்பைக் காட்ட வழி என பாலா கூறுகிறார்

(கிளிநொச்சி)

**நாம் அரசுடன் நடாத்திவரும் பேச்சுவார்த்தைகளை தற்காலிகமாக நிறுத்திக்கொள்வது பற்றிச் சிந்தித்து வருகிறோம் என விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.**

புலிகளின் வர்த்தகக் கப்பல், கடற்படையால் தாக்கப்பட்டு பதினொரு போராளிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து - இவ்விடயம் குறித்துக் கடுமையான எதிர்ப்பைத் தெரிவிக்கவும், பதிவுசெய்யவும் விரும்புவதாகவும் தாம் பலதரப்பட்ட மாற்று வழிகள் குறித்து ஆராய்ந்து கொண்டிருப்பதாகவும், அதில் ஒன்றுதான் - ஜப்பானில் தொடங்கவுள்ள பேச்சுக்களில் கலந்துகொள்ளாமல் இருப்பது என்றும் அன்ரன் பாலசிங்கம் பி.பி.ஸி. நிருபர் பிரான்சிஸ் ஹரிசனுக்கு நேற்று வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

தனிப்பட்ட வகையில் இப்படியான ஒரு முடிவுக்கு ஆதரவாக இல்லை என்றும், ஆனால், இயக்கத்தில் உள்ளவர்கள் இம் முடிவுக்கு ஆதரவாக இருப்பதாகவும், அவர் அப்பேட்டியில் மேலும் கூறினார்.

## ஐ.நா. மனித உரிமைத் தலைவர் கிளிநொச்சியில் புலிகளுடன் பேச்சு



ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுத் தலைவர் இயன் மார்ட்டின், மற்றும் கனேடிய பெடரேசன் அமைப்பைச் சேர்ந்த பிரியா சூட், பேராசிரியர் டேவிட் கமரூன், பொப் றே ஆகியோர் நேற்று கிளிநொச்சிக்கு வருகைதந்திருந்தனர். அவர்கள் அங்கு - புலிகளின் நீதி நிர்வாகச் செயற்பாடுகளை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டினர். (10 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரைக் கட்டுப்படுத்தமுடியாத அரசாங்கத்துடன் பேசி என்ன பயன்?

### புலிகள் கண்காணிப்புக் குழுவிடம் கேள்வி

இதுவரை கடலில் அசம்பாவிதம் ஏற்பட்டால், கடற்படை அவ்விடத்துக்கு கண்காணிப்புக் குழுவை அழைத்துச் செல்வது வழமை. ஆனால், இம்முறை எமது வணிகக் கப்பல் தாக்கப்பட்ட சம்பவத்தின் போது, கடற்படை ஏன் சம்பவ இடத்துக்கு கண்காணிப்புக்குழுவை அழைத்துச் செல்லவில்லை என, புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று கிளிநொச்சியில் நடைபெற்ற கண்காணிப்புக்குழுவுடனான சந்திப்பின்பின், அவர் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பை மேற்கொண்டார்.

முன்னதாக - சர்வதேச கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் வணிகக் கப்பலை, கடற்படை தாக்கியழித்த சம்பவம் தொடர்பாக, விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் குழுவுக்கும் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்று மாலை கிளிநொச்சியில் சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வே பிரதியமைச்சர் இன்று கிளிநொச்சிக்கு

நோர்வே பிரதி வெளியுறவு அமைச்சர் விதார் ஹெல்கிசன் நேற்று கொழும்பு வந்து சேர்ந்தார். இவர் நேற்றிரவு ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரைச் சந்தித்தார்.

நோர்வே அமைச்சர் இன்று கிளிநொச்சி வருகிறார். அங்கு புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோருடன் பேச்சு நடாத்தவுள்ளார்.

இன்றைய பேச்சுக்களில் தலைவர் பிரபாகரன் கலந்துகொள்வாரா என்பது பற்றி முடிவாகவில்லை என புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்றுத்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### ஹெலி விபத்திலிருந்து ஹெல்கிசன் தப்பினார்

நேற்று கொழும்பு வந்து சேர்ந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் - நேற்று மாலை கண்டிக்குப் புறப்பட்டுச் சென்றபோது - சீரற்ற கால நிலையால் - அவர் சென்ற ஹெலிகொப்ரர் - ஆபத்தில் சிக்கியதாகவும், அது உடனடியாகத் தரையிறக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது. விதார் ஹெல்கிசனுடன், அரசாங்கத்தின் உயரதிகாரிகள் சிலரும் அந்த ஹெலிகொப்ரரில் இருந்ததாகவும் - தெய்வாதீனமாக, எவருக்கும் இந்த உடனடித் தரையிறக்கத்தில் காயமேற்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

## கப்பல் அழிப்பு தொடர்பாக கடற்படையிடம் விளக்கம்

### கோரப்போவதாக பிரதமர் ரணில் தெரிவிப்பு

முல்லைத்தீவிற்கு அப்பால் சர்வதேசக் கடற்பரப்பில், விடுதலைப் புலிகளின் கப்பல் தாக்கப்பட்டமை தொடர்பாகக் கடற்படையினரிடம் விளக்கம் கோரப்படவுள்ளதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் இன்னும் இரண்டு ஆண்டுகளில் தெரியவரும் என்றும் அவர் சொன்னார்.

கண்டியில் நேற்று இடம்பெற்ற ஐ.தே. கட்சியின் பொதுக் கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர், புரிந்துணர்வு உடன்படிக்கையில் குறைபாடு இருக்கின்றது. அதற்காகப் போருக்குச் சென்றுவிட முடியாது என்றும் கூறி னார்.

போரா? சமாதானமா? என்பதை மக்களே தீர்மானிக்க வேண்டும் என்றும் எடுத்துக்கூறிய அவர், மீண்டும் ஒரு போரை இந்த நாடு தாங்காது என்றும் தெரிவித்தார்.

இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிப் போராளிகளுக்கும் இடையே, அவ்வப்போது ஏற்படுகின்ற முறுகல்நிலைகள் சுமுகமான


(10 ஆம் பக்கம் பார்க்க)

### விண்ணாணம் விநாசியர்




சுத்துமாத்துக்காரரிட்ட விளக்கம் வேற கேக்கோணுமே...?

# சின்ன மீனைப் போட்டு


மக்கள் ஜனநாயகப் பேரவை
මහජන ප්‍රජාතාන්ත්‍රික පෙරමුණ
PEOPLE'S DEMOCRATIC ALLIANCE

177, 1st குறுக்குத் தெரு, வேம்படி, யாழ்ப்பாணம். T.P : 021-2705
No 177, 1st Cross Street, Vembadi, Jaffna. T.P 021-2705
People's Rights' & Democracy.


மசூத்தின் அடையாள அட்டை

கடந்த மாதத்தின் இறுதிவாரம் - யாழ்.பொலிஸ் நிலையத்துக்கு ஒரு அநாமதேய தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. அப்போது யாழ். பொலிஸ் தலைமையகத்தில் சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ்.கே. ஆனந்த செனிவிரட்ண கடமையிலிருந்தார். அவர் உடனடியாகவே செயற்பட ஆரம்பித்தார். 512 ஆவது பிரிகேட் தலைமையக அலுவலகத்துடன் தொடர்புகொண்டு நிலைமையை

வர்கள் எங்கே போனார்கள் என்று ஆராய முற்பட்ட போதுதான், மசூத் குழுவினருடன் இணைந்து அவர்கள் நடாத்திய மோசடிகள் அடுக்கடுக்காக வெளிவந்து கொண்டிருந்தன.

பொலிஸார் தேடுதல் நடாத்துவதற்கு இருவாரங்களுக்கு முன்னரே, மசூத் அந்த அலுவலகத்தில் காணப்பட்ட பெறுமதியான பொருட்களை எடுத்து ஒவ்வொன்றாக விற்பனை செய்து கொண்டிருந்தான். மின் உப

டியோ குடாநாட்டைவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர்.

அவர்களின் அலுவலகத்திலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்ட ஆவணங்கள் பலவற்றை அப்பட்டமாகக் கூறின.

மக்கள் ஜனநாயகப் பேரவை என்ற அந்த அரசியல் கட்சிக்கு, பல வழிகளில் வருமானம் வந்து கொண்டிருந்தது. இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் இலவச உல்உணவு நிவாரணம் இவர்களுக்கும் கிடைத்தது. அது ஒன்று இரண்டு குடும்பங்களுக்கானது அல்ல. இவர்களுக்கெனப் பொய்யாகப் பெயர் பதிவுசெய்யப்பட்டு, பல குடும்பங்களுக்கான இலவச உலர் உணவு நிவாரணத்தினை இவர்கள் நீண்ட காலமாகப் பெற்று வந்துள்ளனர். தீவகத்தில் உள்ள பிரதேச செயலகம் ஒன்று இவர்களுக்கான இந்த ஏற்பாடுகளை,

### பனங்காட்டு நரியார் புலனாய்வில்...

திரைமறைவில் செய்து கொடுத்திருந்தது. சமகாலத்தில் யாழ்.பிரதேச செயலகத்தின் ஊடாகவும் இவர்களுக்கு இலவச உலர் உணவு விநியோகம் கிடைத்திருக்கிறது.

- இவ்வாறு மோசடியாக பெருமளவில் கிடைக்கும் உணவுப் பொருட்களை விற்று, பெருந்தொகைப் பணத்தை மாதாந்தம் இவர்கள் பெற்று வந்திருக்கின்றனர். அவர்களுக்கு அதிகம் வருமானம் பெற்றுத்தந்த மோசடி நடவடிக்கைகளில் இதுவும் ஒன்று.

# பெரிய மீனைப் பிடிப்பது எப்படி....?

விளக்கினார். இராணுவத்தினருடன் இணைந்து நடவடிக்கையில் இறங்குவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அன்றைய தினம் இருபத்தி மூன்றாம் திகதி, காலை 10.30 மணியளவில் யாழ்.நகரில் வேம்படிச் சந்தியிலிருந்து கூப்பிடுதொலைவில் உள்ள அந்த அலுவலகம், திடீரென சுற்றிவளைக்கப்பட்டது. அலுவலகக் கட்டடத்துக்குள் இராணுவத்தினரும், பொலிஸாரும் நுழைந்து தேடுதல் நடாத்தினர்.

அங்கிருந்த பல மறைவிடங்களிலிருந்து, கணிசமான ஆயுதங்கள் மீட்கப்பட்டன. மறைவிடங்களைத் தேடிக்கண்டுபிடிப்பதில் பொலிஸாருக்கு அங்கு அதிக சிரமம் இருக்கவில்லை. அந்த அலுவலக வீட்டின் கொல்லைப்புறத்தில் மண்ணைக் கிளறியபோது, அங்கே கைக்குண்டுகள்.

இராமேஸ்வரனின் அலுவலக அறையின் யன்னலுக்கு மறைப்புக்காக ஒட்டப்பட்டிருந்த கடதாசியைக் கிழித்துப் பார்த்தால், அங்கே துப்பாக்கிகள். கிணற்றடியில் மோட்டர் அறையைத் திறந்து பார்த்தால், அங்கே ரவைக்கூடுகள். வீட்டின் பக்கப்புறம் நின்று நிமிர்ந்து பார்த்தால், கூரைக்குக்கீழ் உள்ள பிளாட்டில், துப்பாக்கிகள் பல வரிசையாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. எந்தச் சிரமமும் இன்றி ஆயுதங்கள் அனைத்தையும் பொலிஸார் அள்ளிக்கொண்டு சென்றுவிட்டனர்.

எவரும் எதிர்பார்க்காத வகையில் நடைபெற்ற இச்சம்பவத்துக்குப் பின்னர்தான் விடயம் அம்பலத்துக்கு வந்தது. பலருக்கு விழிகள் பிதுங்கின. இன்னும் பலர் அப்போதுதான் தாம் ஏமாற்றப்பட்டு விட்டோம் என்று உணர்ந்து கொண்டனர்.

அந்த அலுவலகத்தில் இருந்து அதுவரை குட்டி ராச்சியம் நடத்திய

கரணங்கள் உட்பட அனைத்து வீட்டுப்பாவனைப் பொருட்களும் விற்பனையாகிக் கொண்டிருந்தன. இந்த


இங்கும் ஆயுதங்கள் கண்டுபிடிக்கப்பட்டன

விற்பனை மூலம் இலட்சக்கணக்கான ரூபாய்கள் மசூத்தின் கைகளுக்குக் கிடைத்தன.

பாண்டியனும், சத்தியேந்திராவும் ஒரு மாலைப் பொழுதில் காவல் கடமைக்காக அந்த அலுவலக வாசலில் நின்று கொண்டிருந்தனர். யாழ். நகருக்குச் செல்வதாகக் கூறிவிட்டு சர்வசாதாரணமாக அங்கிருந்து புறப்பட்டுச் சென்றான் மசூத். அதன்பின்னர் மசூத் திரும்பி வரவே இல்லை. இதற்கு இருநாட்களுக்கு முன்னதாகவே, தன்னுடன் இணைந்து செயற்பட்ட ஏனையவர்களை விமானம் மூலமாகக் கொழும்புக்கு அனுப்பியிருந்தான். மசூத் திரும்புவார் என்று பாண்டியனும் சத்தியேந்திராவும் எதிர்பார்த்துக் காத்திருந்தபோதுதான், பொலிஸாரின் அந்த சுற்றிவளைப்பு இடம்பெற்றது. மோசடியில் நேரடியாக ஈடுபட்ட அத்தனைபேரும் எப்ப

இத்தனை மோசடி நடவடிக்கைகளையும், யாழ்ப்பாணத்தில் செய்துவிட்டு, சத்தமில்லாமல் தப்பித்துச் சென்றுவிட்டது அந்தக கும்பல். கைவசம் இருக்கும் ஆதாரங்களை வைத்து இக்கும்பலுக்கெதிராக நடவடிக்கை எடுப்பது யார்? பொலிஸ் திணைக்களம் இவ்விடயத்தில் எது வரை செல்லும்?

- இவ்வாறான மோசடிக் கும்பல் போன்று, இனிவரும் காலத்திலும் யாழ். மண்ணில் எவரும் கால்பதிப்பதை பொதுமக்களின் விழிப்புணர்வு தான் தடுத்துக்கொள்ளும். இதற்கு அனைவரும் தயாராக இருக்க வேண்டும்.

*(முற்றும்.)*

கொம்பியூட்டரின் துணையுடன் தயாரிக்கப்படும் பொலிமர் றபர் சீல்களை ஒரே நாளில் தயாரித்துப் பெற்றுக்கொள்ள
**கலைக்குழல்**
239, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
காலத்தால் பழுதடைந்த உங்கள் அன்புக்குரியவரின் போட்டோக்களை கொம்பியூட்டரின் துணையுடன் மீண்டும் சிறந்த முறையில் புதுப்பித்துக்கொள்ளலாம்.
(278)

**ராஜா**
யாழ்ப்பாணம்.
காசி புகழ் விக்ரம், லைலா, விவேக், வையாபுரி, நாசர் நடித்த
**தில்**
நேரம்:- 10.30, 2.30, 6.30 மட்டும்
**U. 571**
இன்று மட்டும் இரவு 9.30.
(சி-628)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)
விஜயகாந், மீனா நடித்த
**தேவன்**
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 மணி காட்சி
**RUSH HOUR - 2**
(சி-627)

# சர்வதேச சட்டங்களை மீறியே புலிகளின் கப்பல் தாக்கப்பட்டது

## பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளின் சர்வதேச வணிகக் கப்பலை தாக்கி அழித்தமை, புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறியும் சர்வதேச சட்டத்துக்கு முரணாகவும், புலிகளின் பொறுமையை இழக்கவைக்கும் செயலாக அமைகிறது என, யாழ். பல்கலைக் கழக மாணவர் ஒன்றியம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறிலங்கா அரசியல் தலைவர்களும், படையதிகாரிகளும் இவ்வாறான சம்பவங்களுக்கு மன்னிப்புக் கேட்பதை தந்திரோபாயமாகக் கையாளாது சமாதானத்தைக் கட்டியெழுப்ப உண்மையாகச் செயற்பட வேண்டும் எனவும் அதில் கேட்கப்பட்டுள்ளது.

# 11 போராளிகளுக்கு குடாநாட்டில் அஞ்சலி

சர்வதேச கடற்பரப்பில் கடற்படையினரின் தாக்குதலினால் வீரச்சாவடைந்த பதினொரு போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தும் வகையில் வடபகுதி எங்கும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

வட பகுதியின் பிரதான இடங்கள், பொது இடங்கள் மற்றும் பாடசாலைகள், அலுவலகங்கள் ஆகியவற்றின் முன்பாக கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருக்கின்றன.

இவற்றைவிட பிரதான சந்திகள் தோறும் ஒலி பெருக்கிகள் பொருத்தப்பட்டு சோககீதம் இசைக்கப்படுகிறது.

குடாநாட்டில் யாழ். நகரப்பகுதிகள் உட்பட, பிரதான பகுதிகள் எங்கும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

திருநெல்வேலிப் பகுதியிலும் யாழ்.நகரிலும் சோககீதம் இசைக்கப்படுவதுடன், மக்களின் நடமாட்டமும் யாழ்.நகரில் நேற்றைய தினம் குறைவாகக் காணப்பட்டது.

# புலிகளுடன் இணைய வந்திருந்த 4 சிறுவர் பெற்றோரிடம் ஒப்படைப்பு

(வவுனியா)

விடுதலைப் புலிகள் அமைப்பில் இணையவந்த, பதினெட்டு வயதிற்குட்பட்ட சிறுவர்கள் நான்கு பேர் நேற்று அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

நேற்றுப் பிற்பகல் வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த இரு சிறுவர்களையும், அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைத்ததுடன் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த இரு சிறுவர்கள், அவர்களின் பெற்றோர்களிடம் ஒப்படைப்பதற்காக மன்னார் அரசியற்துறைச் செயலகத்திற்கு, அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

(ச)

**தேவை**
1) TRAINED NURSES
2) மருந்து விற்பனையில் அனுபவமுள்ள பெண்கள்
3) தாதிப்பயிற்சி பெற விரும்புபவர்கள்
**சம்பந்தர் மொடேன் கிளினிக்**
08, இராமையாச் செட்டியார் வீதி
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகே)
யாழ்ப்பாணம்.
(சி-673)

## இன்றைய நாள் இனிய நாள்

**13-03-2003 - வியாழக்கிழமை**

| | |
|---|---|
| மேடம் | :- சத்துரு வெற்றி, காரிய சித்தி, தொழில் சிறப்பு, மனமகிழ்ச்சி, பொருள்வரவு. |
| இடபம் | :- காரிய தாமதம், பிரயாணக்கஷ்டம், பொருட்சேதம், வயிற்றில் ரோகம். |
| மிதுனம் | :- தனவரவு, நற்கீர்த்தி, பேரும்புகழும் கிடைத்தல், லட்சுமீகரம், அதிகபிரயாசை. |
| கர்க்கடகம் | :- தருமகாரிய சித்தி, காலில் காயம், வாக்குக்கலகம், வீண்பழி, அவமானம். |
| சிங்கம் | :- பணக்குறைவு, காரியவிக்கினம், வாகன லாபம், அதிகாரசித்தி. |
| கன்னி | :- இல்லச்சிறப்பு, தானதருமம், சிநேக லாபம், அதிகார வெற்றி, குடும்பசுகம். |

**பிரபல சோதிடர் எஸ்.குகநேசன்**

| | |
|---|---|
| துலாம் | :- அஜீரணம், தேகமெலிவு, தாழ்ந்தநிலை, பணச்செலவு, பொருள் இழப்பு. |
| விருச்சிகம் | :- பிரயாசமிகுதி, சந்தோஷம், காரியவெற்றி, பூமிலாபம், வாக்கு வசீகரம். |
| தனு | :- வாகன நஷ்டம், பொருட்செலவு, தொழில் நஷ்டம், வாக்குக்கலகம். |
| மகரம் | :- களஸ்திரசுகம், பெரியோர் மதிப்பு, மனச் சந்தோஷம், நன்மதிப்பு. |
| கும்பம் | :- உற்சாகமின்மை, கோபமிகுதி, தாரபுத்திர விரோதம், சிநேக பிரிவு. |
| மீனம் | :- தொழில்விருத்தி, மனமகிழ்ச்சி, வாக்கு வசீகரம், குடும்ப சந்தோஷம். |

# புலிகளின் கப்பல் அழிக்கப்பட்ட சம்பவம்

# ஆராய்வதற்கு கூடிய பாதுகாப்புச்சபை

திருகோணமலைக்கு அப்பால் சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் வர்த்தகக் கப்பல் தாக்கி அழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக ஆராய, பாதுகாப்புச்சபை நேற்று முன்தினம் இரவு விசேடமாகக் கூட்டப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர், அமைச்சின் செயலாளர், முப்படைத்தளபதிகளும் கலந்து கொண்டதாகத் தெரியவருகின்றது.

புலிகளின் கப்பல் தாக்கப்பட்டதால், ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை குறித்தும், இந்த நெருக்கடியைத் தவிர்த்துக்கொள்வது குறித்தும் பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டதாகத் தெரியவருகின்றது.

அத்துடன், வட-கிழக்குப் பகுதிகளிலும், கடற்பரப்பிலும் படையினரைத் தொடர்ந்தும் உஷார்நிலையில் வைத்திருப்பது குறித்தும் பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதேவேளை, புலிகளின் கப்பல் தாக்கி, மூழ்கடிக்கப்பட்ட விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகாவுடன் கலந்தாலோசனை செய்வதற்காக- பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுமுன்தினம் மாலை அவரைச் சென்று சந்தித்தார். சுமார் இரண்டு மணிநேரம் நீடித்த சந்திப்பின்போது இருவருக்குமிடையில் வாக்குவாதங்கள் இடம்பெற்றதாகவும் தெரியவருகின்றது. இச்சந்திப்பில் லக்ஷ்மன் கதிர்காமர் மற்றும் பாலபெத்தபெண்டி ஆகியோர் ஜனாதிபதி சந்திரிகாவுடன் இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## விண்ணப்ப முடிவுத்திகதி நீடிப்பு

(யாழ்ப்பாணம்)

இரண்டாம் உலக இந்து மாநாடு தொடர்பாக இந்துசமய விவகார அலுவல்கள் அமைச்சினால் பாடசாலை மாணவரிடையே நடாத்தப்படவுள்ள கட்டுரை, பண்ணிசை, பேச்சுப் போட்டிகளுக்கான விண்ணப்ப முடிவுத்திகதி எதிர்வரும் 14 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

கட்டுரைப்போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

போட்டிக்கான விதி முறைகளை வலயக்கல்விப் பணிப்பாளர்களின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

மற்றைய போட்டிகள் நடைபெறும் திகதியும், இடமும் பத்திரிகைகள் மூலமாக தெரியப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் கப்பல் தாக்கப்பட்டது மிகவும் பாரதூரமான விடயம்!

### கண்காணிப்புக்குழு பிரதித்தலைவர் தெரிவிப்பு

கிழக்குக் கடற்பகுதிக்கு அப்பால், கடற்படையினருக்கும் - விடுதலைப் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவத்தை மிகவும் பாரதூரமாகக் கருதுகின்றபோதிலும், அது யுத்தநிறுத்த மீறல் என்று கூறப்போவதில்லை என்று இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹோக்லன்ட் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் சமாதான நடவடிக்கைகளில் எந்தளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என விபரித்துக் கூறமுடியாது. இந்த மோதல் சம்பவம் சர்வதேசக் கடற்பிரதேசத்தில் இடம் பெற்றுள்ளதால், இந்த சர்ச்சையைத் தீர்த்து வைப்பதில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## உதவித் திட்டங்கள் குறித்து ஆராய 3 அமெரிக்க அதிகாரிகள் கொண்ட குழு

### யாழ். வந்த அமெரிக்கத் தூதுவர் அஷ்லி வில்ஸ் தெரிவிப்பு



இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பான விடயத்தை அமெரிக்க மிகவும் உன்னிப்பாகக் கவனித்து வருவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அஷ்லி வில்ஸ் தெரிவித்தார்.

அமெரிக்கத் தூதுவர் அஷ்லி வில்ஸ் தலைமையிலான உயர்மட்டக்குழுவினர் நேற்றுமுன்தினம் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கையின் இனப்பிரச்சினை தீர்வுக்காக, தற்போது நடைபெற்று வரும் சமாதான முயற்சிகள் தொடர்பாக அமெரிக்கா மிகுந்த ஆர்வத்துடன் கவனித்துவருகின்றது.

நீண்டகாலமாகத் தீர்க்கப்படாதுள்ள இனப்பிரச்சினையை உடன் முடிவுக்கு கொண்டுவருவது மிகவும் கடினமானதாகும். தமிழ்மக்கள் சமாதானத்தின் விளைவை உடன் எதிர்பார்க்க முடியாது. நீண்டகாலமாகத் தமிழ்மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதில் அமெரிக்கா மிகவும் அக்கறையாக இருந்து வருகின்றது.

அமெரிக்கா - குடாநாட்டில் பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்வது தொடர்பாக ஆராய்ந்து வருகின்றது. குறிப்பாக யுத்தத்தினால் அங்கவீனமானவர்களுக்குப் பல்வேறு புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதுடன், மக்களுக்கான மனிதாபிமான உதவிகளையும் வழங்கும்.

இங்கு மேற்கொள்ளும் உதவித் திட்டங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக - மூவர் அடங்கிய உயர்மட்டக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. அவர்கள் மிகவிரைவில் யாழ்ப்பாணம் வந்து, சில தினங்கள் இங்கு தங்கியிருந்து மேற்கொள்ளவேண்டிய உதவிகள் தொடர்பாக ஆராய்வர். தற்போது இங்கு மேற்கொண்ட விஜயம் அதன் ஆரம்பக்கட்டம் எனவும் அஷ்லி வில்ஸ் மேலும் தெரிவித்தார்.

(ச),(ரா),(60)

## கண்காணிப்புக்குழுவின் தலைவர் இன்று திருமலைக்கு விஜயம்

(கொழும்பு)

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரெலவ்சன் இன்று திருகோணமலைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

கண்காணிப்புக்குழுவின் தலைவராகப் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர், திருகோணமலை மாவட்டத்தின் நிலைமையை நேரில் ஆராய்வதற்கே ரெலவ்சன் அங்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது, திருகோணமலையிலுள்ள 22 ஆவது டிவிஷன் தளபதி உட்பட இராணுவ, கடற்படை, விமானப்படை அதிகாரிகளையும், புலிகளின் திருகோணமலை அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக் மற்றும் உள்ளூர் கண்காணிப்பாளர்களையும் ரெலவ்சன் சந்தித்துப் பேசுவார் எனத் தெரியவருகிறது.

## சிறுபான்மையினரின் உரிமைகள்; கருத்தரங்குகள் நடத்தத் திட்டம்!

(யாழ்ப்பாணம்)

சிறுபான்மை மக்களின் உரிமைகள் தொடர்பாக பொது மக்களுக்கு விளக்கமளிக்கும் தொடர் கருத்தரங்குகளை நடத்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஏற்பாடு செய்துள்ளது.

ஐரோப்பிய யூனியனின் நிதியுதவியுடன் நாடு முழுவதும் கருத்தரங்குகள், கூட்டங்கள் நடத்தப்பட்டு, சிறுபான்மை மக்களின் உரிமைகள் குறித்து விளக்கமளிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## சர்வதேச தொழிலாளர் தினத்தன்று 'தருண அருண' திட்டம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இளைஞர் யுவதிகளுக்குத் தொழில் வாய்ப்பைப் பெற்றுக்கொடுக்கும் 'தருண அருண' திட்டம்- சர்வதேச தொழிலாளர் தினத்தில் அமுல்செய்யப்படவிருக்கிறது. அதனை வெற்றிபெறச் செய்வதற்காக, நிலையியற் குழுக்கள் அமைக்கப்பட இருப்பதாக அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

கொள்கைத்திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சின் ஆலோசகர் ஆர்.பாஸ்கரலிங்கம் இதற்கான பிரதான குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

'தருண அருண' திட்டத்திற்கு உலகவங்கியின் உதவி கிடைக்கும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தில் இணையும் வேலைவாய்ப்பற்ற பட்டதாரிகளுக்குப் பயிற்சிக் காலத்தில் 3000 ரூபா கொடுப்பனவு வழங்கப்படும். பயிற்சி வழங்கும் நிறுவனங்களுடன் பேசி மேலதிகக் கொடுப்பனவு வழங்குவதற்குக் கவனம் செலுத்தி வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

### ஐ.தே.கவில் அங்கத்துவம் பெற

## பீரிஸ் உட்பட எட்டுப்பேருக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உட்பட எட்டுப்பேர் ஐக்கிய தேசியக்கட்சியில் அங்கத்துவம் பெறுவதற்கும், அங்கத்துவம் வழங்குவதற்கும் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தால் கடந்த 10 ஆம் திகதி விதிக்கப்பட்ட தடை உத்தரவு நேற்றுமுன்தினம் காலை நீக்கப்பட்டது.

அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் உட்பட எட்டுப்பேர் சமர்ப்பித்த மனுவைப் பரிசீலித்த பின்னரே, இந்தத் தடை உத்தரவு நீக்கப்பட்டது.

இந்த மனு மீதான மேலதிக விசாரணைகள் எதிர்வரும் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறும் என்று நீதிமன்றம் அறிவித்துள்ளது.

## நியமனம் வழங்க பின்னடித்தால் வலய ரீதியாகவும் போராட்டம்

### தொண்டராசிரியர் சங்கத் தலைவர் கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

தொண்டர் ஆசிரியர்களுக்குத் தொடர்ந்தும் நியமனம் வழங்குவதற்கு அரசு பின்னடித்தால், வலய ரீதியாக தமது போராட்டம் தொடரும் எனத் தொண்டர் ஆசிரிய சங்கத் தலைவர் இந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற தொண்டர் ஆசிரிய சங்கத்தின் பேரணியின் பின்னர் யாழ். செயலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கூறுகையில், தென்பகுதிகளில் ஆசிரியர் வெற்றிடத்திற்கு மேலாக ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆனால், வட-கிழக்கில் இன்னமும் 8000 வெற்றிடங்கள் உள்ளன. கஷ்டமான சூழ்நிலையிலும் நாம் - எமது சேவையைச் செய்துவருகிறோம் என மேலும் தெரிவித்தார்.

(ரா,ச,60)




நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற தமிழீழ நீதிமன்ற வளாகத் திறப்புவிழாவில் பெயர்ப்பலகையை நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழ்க்குமரன் திறந்துவைப்பதையும், தேசியக்கொடியை தமிழீழக் காவல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் ஏற்றுவதையும், இந்நிகழ்வின் கலந்துகொண்ட நீதித்துறைப் பொறுப்பாளர் பரா மற்றும் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# தமிழ்த் திரைக்கலை வளர்ச்சியில் பாராமுகம் நாடாளுமன்றில் கவன ஈர்ப்பு பிரேரணை

## சிவாஜிலிங்கம் உறுதி

(கொழும்பு)

தமிழ்த் திரைக்கலை வளர்ச்சிக் குத் தேசிய திரைப்படக் கூட்டுத்தாப னம் காட்டிவரும் பாராமுகத்தைக் கண்டித்து நாடாளுமன்றத்தில் கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வர இருப்பதாகவும் - கல்வி, மனித வள கலாசார பண்பாட்டலுவல்கள் அமைச்சருடன்- அமைப்பு விடயங்கள் குறித்து விளக்குவதற்கு ஒரு சந் தப்பை ஒழுங்குசெய்து தருவதாகவும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் உறு தியளித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் சலன சித்திரம் அமைப்பின் நிர்வா கத்தினருடனான சந்திப்பின்போது, அமைப்பின் தேவைகள் பற்றிக் கேட் டறிந்தபோதே அவர் இவ்வாறு உறு தியளித்துள்ளார்.

## சின்னஞ் சிறு செய்திகள்

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

(நாரந்தனை)

நாரந்தனை றோமன் கத்தோ லிக்க மகா வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று பிற்பகல் 1.30 மணிக்கு - பாடசாலை அதிபர் ச.சத்தியதாசன் தலைமை யில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கலந்துகொள்கிறார்.

### பாலர் கல்விக்கழக செயலமர்வு

(பாஷையூர்)

பாலர் கல்விக் கழகத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளி ஆசிரியர்க ளுக்கான 5 ஆவது செயலமர்வு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்குக் கழகக் காரி யாலயத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் யாழ். கல்வி வலயத்தைச் சேர்ந்த - ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் சிவபா தம் கருத்துரை வழங்கவுள்ளார்.

எனவே, சகல முன்பள்ளி ஆசிரி யர்களையும் இதில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (119)

### பனையிலிருந்து வீழ்ந்த சிறுவன் காயம்

(நெல்லியடி)

பனையிலிருந்து விழுந்து, கை ஒன்று முறிந்தநிலையில், சிறுவன் ஒருவன் யாழ்.போதனா வைத்தியசா லையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோயில் சந்தை, நெல்லிய டியைச் சேர்ந்த ரா.ஞானதீபன் எனும் சிறுவனே பனைமரத்தில் ஏறும்போது தவறுதலாக விழுந்து காயமடைந் துள்ளார். (ரா)

### ஆன்மீக சொற்பொழிவு

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபத்தில் பிரதி வெள்ளிக் கிழமைதோறும் நடைபெறும் ஆன்மீ கச் சொற்பொழிவுத்தொடரில் நாளை பி.ப 5.30 மணிக்கு "வாக்கிற்கு அரு ணகிரி" எனும் விடயம் தொடர்பாகப் புத்தூர் சோமஸ்கந்தக் கல்லூரி ஆசிரியர் ச.லலீசன் சிறப்புச் சொற் பொழிவாற்றவுள்ளார்.

# விடுதலைப் போரை சர்வதேச சமூகம் அறிந்து கொள்ளச் செய்தவர் குமார்!

## நினைவஞ்சலிக் கூட்டத்தில் உரை

எமது இனத்தின் சுதந்திரத்திற் காகவும், சுபீட்சமான வாழ்விற்காக வும் நடந்து கொண்டிருக்கின்ற இன விடுதலைப்போரைச் சர்வதேச சமூ கம் அறியச்செய்தவர் மாமனிதர் குமார் பொன்னம்பலம்.

- இவ்வாறு அண்மையில் நெல்லி யடியில் நடைபெற்ற குமார் பொன்னம் பலத்தின் 3 ஆம் ஆண்டு நினைவஞ்ச லிக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றிய வடமராட்சி அரசியற்துறை யைச் சேர்ந்த வெண்ணிலவன் தெரி வித்தார்.

அவர் மேலும் அங்கு உரையாற் றும்போது - சிங்கத்தின் குகைக்குள் நின்றுகொண்டே, தமிழரின் உரிமைக் காக உரத்து முழக்கமிட்டவர் அவர். மனித நாகரிகத்துக்கு அப்பாற்பட்ட வகையில், கொடுமையான முறையில் சிங்களப் பேரினவாதிகள் அவரைச் சாகடித்தனர். ஆயினும், இந்த மண் ணுக்காக வீழ்ந்தவர்களின் சாவுகள் என்றுமே வீணாகாது என்றும் தெரி வித்தார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.விநாய கமூர்த்தி தனது உரையின்போது-

இன்றைய இந்த நிகழ்வு மக்கள்- அந்த மாமனிதரை மறக்கவில்லை என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டு. பிரபாவின் கொள்கையை ஏற்று, அவரையே தேசியத் தலைவ ராகவும், விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்றும் அன்றே எடுத்துக் கூறியவர் அமரர் குமார் பொன்னம்பலம் அவர்களே. அவர் அன்று இட்ட அடித்தளம் இன்று தமிழ்க் கூட்டமைப்பு உருவாகி, விடு தலைப்புலிகளோடு இணைந்து நிற் கக் காரணமாகும் என்றும் தெரிவித்தார்.

# பொ.ஐ.மு. நாடாளுமன்ற உறுப்பினர் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி யின் இரத்தினபுரி மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகராவை இம்மாதம் 25 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக் குமாறு இரத்தினபுரி நீதிவான் உத் தரவிட்டுள்ளார்.

நிவித்திகல பொலிஸில் நீதிமன் றத்தில் சமர்ப்பித்த அறிக்கையை ஆராய்ந்த பின்னரே- நீதிவான் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிர தேசசபை உறுப்பினர் ஒருவரை கடந்த திங்கட்கிழமை இரவு நிவித் திகல பகுதியில் வைத்து துப்பாக்கி யால் சுட்டதாக இவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

## 19 வயதுக்குட்பட்டோருக்கான கிரிக்கெட்

# உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி வடமராட்சி வலயத்தில் சாம்பியன்!

(நவிண்டில்)

வடமராட்சி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான 19 வயதிற்குட்பட்டோருக்கான 15 ஓவர் களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் - உடுப்பிட்டி அமெரிக் கன் மிஷன் கல்லூரி முதலாம் இடத் தைப் பெற்றது.

இப்போட்டியில் முதலில் துடுப் பெடுத்தாடிய உடுப்பிட்டி அமெரிக் கன் மிஷன் கல்லூரி - 8 விக்கட்டுக் களை இழந்து 68 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய ஹாட்லிக் கல்லூரி அணி - 13.2 ஓவர்களில் சகல விக்கெற்றுக் களையும் இழந்து 33 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தோல்வியடைந் தது.

3 ஆம் இடத்திற்கான போட்டி யில், நெல்லியடி மத்திய மகா வித் தியாலத்தை - கரவெட்டி விக்னேஸ் வராக் கல்லூரி வெற்றியீட்டியதன் மூலம் 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (116)

# ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் இலாப, வட்டி கொடுப்பனவு உயர்வு

ஊழியர் நம்பிக்கை நிதியம் - தமது அங்கத்தவர்களுக்கான வட்டி மற்றும் இலாபப் பங்கீட்டுக் கொடுப் பனவுகளை 12 சதவீதத்தால் அதி கரிக்கத் தீர்மானித்துள்ளது.

கடந்த ஆண்டுக்கான தொகைக ளுக்கு இந்த அதிகரிப்பு மேற்கொள் ளப்படும். சென்றவருடம் மேற் கொண்ட நிர்வாக மறுசீராக்கல் நடைமுறைகளின் காரணமாக இது சாத்தியமாகியிருக்கின்றது என்று நிதியம் அறிக்கை விடுத்துள்ளது.

ஊழியர்களுக்கான வீட்டுக்கடன் களுக்கு அறவிடப்படும் வட்டியும் குறைக்கப்பட்டுள்ளதாகவும் தெரி விக்கப்படுகிறது.

### விபத்தில் காயம்

கோண்டாவிலில் ஆட்டோவும் சைக்கிளும் விபத்துக்குள்ளானதில்- சைக்கிளில் சென்றநபர் படுகாயம டைந்து சுயநினைவிழந்தநிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டார். சங்கத்தானை யைச் சேர்ந்த மா.இராசேந்திரம் (வயது 44) எனும் நபரே இவ்விபத் தில் காயமடைந்தவராவர்.

# நெல்லியடியிலுள்ள பொது நூலகத்தின் வாசகர் நேரத்தை நீடிக்கக் கோரிக்கை

(நெல்லியடி)

நெல்லியடி வதிரியில் இயங்கும் பொதுநூலகத்தின் வாசகர் நேரத்தை மாலை 6 மணிவரை நீடிக்குமாறு, கரவெட்டிப் பிரதேச ஒருங்கிணைப் புக் குழுக்கூட்டத்தில் வைத்து பிர தேசசபையிடம் வேண்டுகோள் விடுக் கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்நூலகத்தின் வாச கரின் நன்மைகருதி சஞ்சிகைகளை வாசகர் பகுதியில் வைக்கவேண்டும் எனவும், சிறுவர்பகுதியை விரைவில் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்க வேண் டும் எனவும் கோரப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் - தாம் உரிய நட வடிக்கை எடுப்பதாக பிரதேச சபை யின் அதிகாரிகள் தெரிவித்துள்ள னர். (13)

# மிருசுவில் விவசாயிகள் நலன்கருதி நீரிறைக்கும் இயந்திரம் அன்பளிப்பு

மிருசுவில் படித்த மகளிர் குடி யேற்றத் திட்டத்தில் மீளக்குடிய மர்ந்து விவசாயம் மேற்கொள்ளும் குடும்பங்களின் நலன்கருதி, எழு துமட்டுவாள் வடக்கு விவசாய சம்மே ளனத்தினூடாகப் பட்டினிக்கு எதிரான நிறுவனம் நீர் இறைக்கும் இயந்திரம் மற்றும் தெளிகருவி என்பவற்றை இலவசமாக வழங்கியுள்ளது.

அத்துடன், படித்த மகளிர் குடி யேற்றத்திட்டத்திலுள்ள பொதுக் கிணறுகளையும் நிர்வாகத்தினர் இறைத்துச் சுத்தம்செய்து வருகின்ற னர்.


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் : பி.அபிலாஸ்
முகவரி: வெல்லம்பற்றை, கரவெட்டி மத்தி.

ஐந்தாவது அகவையில்

பெயர் :பி.வைஸ்ணவி
முகவரி: வெல்லம்பற்றை, கரவெட்டி மத்தி.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------
முகவரி :------------------------------
பிறந்த ஆண்டு:------------------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்









நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்த அமெரிக்கத் தூதுவர் அஷ்லி வில்ஸ் பொது அமைப்புப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவதை முதலிரு படங்களிலும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், ரவிராஜ் ஆகியோருடன் அஷ்லி வில்ஸ் அமர்ந்திருப்பதை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# சுற்றுச் சூழல் மாசடைதலைத் தவிர்க்கும் தூய உற்பத்திக் கைத்தொழில் முறைமை




ஒரு நாட்டின் தொழில் முயற்சிகளை, கைத்தொழில்களை மற்றும் இல்லங்களை முறையாகப் பேணி வரக்கூடிய தலைசிறந்த வழிமுறை தூய உற்பத்தி (CLEANER PRODUC-



TION) என அழைக்கப்படுகின்றது. இத்தகைய தொழில் முயற்சிகள், கைத்தொழில்கள் மற்றும் இல்லங்கள், விரிவான பொருள் தரக்கூடிய உற்பத்திச் செயற்பாடுகள், உற்பத்திகள் (அதாவது பண்டங்கள்) மற்றும் சேவைகள் என அழைக்கப்படுகின்றன. இவற்றை முறையாகப் பேணி வரத்தக்கவகையில் தோள்கொடுக்கும் தூய உற்பத்தி என்பது எமது நாட்டுக்குப் புதியதொரு விடயமல்ல. இது பண்டைக்காலத்தில் இலங்கையின் மூதாதையர்களால் பழக்கிப் பயிற்றப்பட்ட எமது வாழ்க்கை முறையாகும்.

### தூய உற்பத்தி என்றால் என்ன?

பொருளாதார ரீதியாகவும், தொழில் முயற்சி ரீதியாகவும், சரியான புரிந்துணர்வுடன் - போட்டிமிக்கதும், இலாபம் மிக்கதாகவும் அதேவேளையில், மக்களுக்கும் சுற்றாடலுக்கும் நன்மைபயக்கத்தக்கதாகக் கைத்தொழில்களையும், சேவைகளையும் பேணிவருகின்ற ஒட்டுமொத்தமான வழிமுறை தூய உற்பத்தி எனப்படுகின்றது.

### தூய உற்பத்திச் செயற்பாடு

**ஏதேனுமோர் உற்பத்தியிலோ, சேவையிலோ ஓர் அலகிற்காக நுகரப்படுகின்ற இயற்கை வளங்களைப் போன்றே உற்பத்தி செய்யப்படுகின்ற மாசுபாட்டுக் காரணிகளையும், பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமூகரீதியாக வளர்ச்சியினை நீடித்து நிலைத்திருக்கவல்ல மட்டம்வரை குறைக்கின்ற வழிமுறையாவது தூய உற்பத்திச் செயற்பாடாக அமையும்.**

வேறுவிதமாகக் கூறுவதாயின், தூய உற்பத்தியானது-வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும், மனிதன் மற்றும் சுற்றாடல் மீது இடர்வரவு நிலைமைகளைக் குறைப்பதற்காகவும்- உற்பத்திச் செயற்பாடுகள், உற்பத்தி மற்றும் சேவைகளை நோக்கி வழிப்படுத்துகின்ற, தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்படுகின்ற, ஒருங்கிணைந்த சுற்றாடல் தடுப்பு உபாய முறையாகும்.

சுருக்கமாகக்கூறின், தூய உற்பத்தியின் தோற்றுவாயாக அமைவது வீடுவாசலை முறையாக நிர்வகிக்கும் எளிமையான நடவடிக்கையாகும். தூய உற்பத்திக்காகச் சிறிய அளவிலேயே பணம் செலவாகியபோதிலும், இதனூடாகப் பெருமளவில் பணத்தைச் சேமித்துக்கொள்ள இயலுமானதாக அமையும்.

தூய உற்பத்தி என்பது சுற்றாடல் தேவைகளுக்கான தீர்வன்று. தூய உற்பத்தி தீவிரமாகப் பொருளாதாரப் போட்டிநிலை மற்றும் நிலைத்திருக்கவல்ல தேசிய வளர்ச்சியை மையமாகக் கொண்டுள்ளது. தூய உற்பத்தியின் கருப்பொருள் வினைத்திறமையேயாகும். அதாவது, குறைந்த அளவிலான மூலப்பொருட்களைப் பாவிப்பதன் மூலமாகவும், குறைந்த அளவிலான கழிவுப்பொருட்களை வெளியேற்றுவதன் மூலமாகவும் பெறப்படுகின்ற பெறுபேறு உற்பத்தி ரீதியில் வினைத்திறன் மிக்கதாக அமைவதாலாகும்.

உண்மையிலேயே தூய உற்பத்திக் கோட்பாடு அல்லது எண்ணக்கரு - ஆரம்பத்தில் (பொருள் அல்லது பண்டம்) உற்பத்தி செய்யப்படுகின்ற துறைகளுக்காகவே தோன்றியது. ஆயினும், இது தற்போது சுகாதார சேவைகள், போக்குவரத்து, சுற்றுலாத்துறை, சுரங்க அகழ்வு போன்ற பிறதுறைகளை நோக்கியும் வியாபித்துள்ளது.

தூய உற்பத்திக் கோட்பாடு எளிமையானது. ஆயினும், அதன் மூலமாக உங்களுக்கு உயர்ந்த இலாபம் கிடைக்கும்.

### தூய உற்பத்தி எவருக்காக?


சிறப்பாகத் தூய உற்பத்திக் கைத்தொழிலாளர்களை உள்ளடக்கிய தொழில் முயற்சியாளர்கள் அனைவரையுமே இலக்காகக் கொண்டுள்ளது. அத்துடன், தமது தொழில் முயற்சிகள் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மட்டத்தில் இருக்கின்ற தொழில் முயற்சி உரிமையாளர்கள், பிரதம நிறைவேற்றுத்தர உத்தியோகத்தர்கள், பொதுமுகாமையாளர்கள் மற்றும் கணக்காளர்களை இலக்காகக் கொண்டுள்ளது. இவர்கள் தொழில் முயற்சி சம்பந்தப்பட்ட தீர்மானங்களை மேற்கொள்ளத்தக்க அதிகாரம் வாய்ந்தவர்களாவர். தொழில் முயற்சியை எவ்வாறு நெறிப்படுத்த வேண்டுமென அதாவது, முடிவுப்பொருளின் திட்டமிடல், பாவிக்கப்படுகின்ற மூலப்பொருட்கள், இயந்திர சாதனங்களின் தரத்தை மேம்படுத்தல் அல்லது நடவடிக்கைகளை விரிவாக்குதல் போன்ற விடயங்கள் பற்றி இவர்களால் தீர்மானிக்க இயலும். இங்கு சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மீது அதிக கவனம் செலுத்தப்படும். மேலும், தொழில் முயற்சிகளின் முதலீட்டாளர்கள், வங்கியாளர்கள், கடன்கொடுநர்கள் மற்றும் காப்புறுதியாளர்கள் போன்ற இத்துறையில் தாக்க மேற்படுத்தக்கூடிய பிற நபர்கள் மீதும் இங்கு கவனம் செலுத்தப்படும். தொழில் முயற்சியின் இடர்வரவுநிலை மீது இவர்கள் அக்கறை கொண்டுள்ளமையால், தொழில் முயற்சியின் நெறிப்படுத்தல் மீது இவர்களாலும் அழுத்தம் கொடுக்க முடியும்.

தூய உற்பத்தியானது பொதுவாகப் பல்வேறு சுற்றாடல் மாசுபாட்டுக் காரணிகளின் தாக்கத்திற்கு ஆளாகக்கூடிய வகையில் தொழிற்சாலைகளுக்கு அருகில் வாழுகின்ற மற்றும் சனத் தொகை அடர்த்திமிக்க வணிகப் பிரதேசங்களில் வாழும் மக்களை உள்ளடக்கிய, மக்கட் குழுக்களைக்கொண்ட பொது மக்களையே இலக்காகக் கொண்டுள்ளது. அதேவேளையில், சுற்றாடல் மாசுபாட்டினை வெளிப்படையாகவே கண்டறிந்து அது சம்பந்தமாகச் செயலாற்றக்கூடிய ஆசிரியர்கள், மருத்துவர்கள், ஊடகவியலாளர்கள், பொறியியலாளர்கள், வங்கியாளர்கள், சட்டத்தரணிகள், தொழிற்சங்கவாதிகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன/மாகாணசபை உறுப்பினர்கள் மீதும் தூய உற்பத்தி இலக்கினைக் கொண்டுள்ளது.

### கைத்தொழிலாளர்களுக்கும் தொழில் முயற்சியாளர்களுக்கும் தூய உற்பத்தி ஏன் முக்கியம் வாய்ந்தது?

பல்வேறு காரணிகளின் நிமித்தம் கைத்தொழிலாளர்களை உள்ளடக்கிய தொழில் முயற்சியாளர்களுக்கு இத்தூய உற்பத்தி பெரும்பாலும் பயனுறுதி மிக்கதாக அமைகின்றது. அதாவது,

✷ தூய உற்பத்தியின் பிரதான நோக்கமாக அமைவது அதிகரித்த வினைத்திறமையாகும்.



✷ முழுமையான மாற்றத்திற்காகத் தொழில் முயற்சியின் அனைத்து மட்டங்களையும் சேர்ந்த நபர்களின் அர்ப்பணிப்புடன், அவர்களின் மனோபாவங்களை மாற்றி, அவர்களின்பால் முகாமைத்துவத் திறமைகளைப் பிரயோகிப்பதன் மூலமாகவே தூய உற்பத்தி வெற்றி கரமானதாக ஆக்கப்படும்.

✷ தூய உற்பத்தியானது உற்பத்திச் செயற்பாடு, (பொருள்) உற்பத்திகள் மற்றும் சேவைகள் தொடர்பாகவே பிரயோகிக்கப்படுகின்றது. ஆயினும், அனைத்துவிதமான தொழில் முயற்சிகளுக்காகவும், தாபனங்களுக்காகவும் அதன் கோட்பாடுகளைப் பிரயோகிக்கமுடியும்.

✷ தொழிற்சாலைகளின் உற்பத்திச் செயற்பாடுகளில் தூய உற்பத்தியைப் பிரயோகித்தல் என்பது - உற்பத்தி வினைத்திறமையை மேம்படுத்துவதனூடாக மூலப்பொருட்களையும், வலுச்சக்தியையும் சேமிப்பதாகும். ஊறுவிளைவிக்கக்கூடிய மூலப்பொருட்களின் பாவனையைக் குறைப்பதாகும். வெளியேற்றப்படுகின்ற அனைத்துவிதமான பொருட்களினதும் கழிவுகளினதும் அளவினையும், அவற்றின் ஊறுவிளைவிக்கும் தன்மையினையும் குறைப்பதாகும்.

✷ உற்பத்திகள் அதாவது, பொருட்கள்மீது தூய உற்பத்தியைப் பிரயோகித்தலானது - வாழ்நாள் பூராவும் அதாவது, மூலப்பொருட்களை உள்ளீர்த்தல் முதல் இறுதியில் பொருட்களை அகற்றுதல்வரை அதிலிருந்து தோன்றக்கூடிய பாதகமான தாக்கங்களைக் குறைப்பதாகும். மீள்சுழற்சி (RECYCLING) அதாவது மீண்டும் பாவனைக்கு எடுத்தல் (உதாரணமாக - பழைய கடதாசிகளைப் பயன்படுத்திப் புதிதாகக் கடதாசி உற்பத்தி செய்தல்) மற்றும் மீள்பாவனை (REUSE) அதாவது, பொருட்களைப் பொதிசெய்யப் பழைய கடதாசிகளைப் பாவித்தல் ஆகியவை இதிலடங்கும்.

✷ சேவைகளுக்காகத் தூய உற்பத்தியைப் பிரயோகித்தலானது திட்டமிடலிலிருந்து சேவைவழங்கல்வரை அதற்கான சுற்றாடல் தேவைகளைச் சேர்ப்பதாகும். (உதாரணமாகப் பொதுப் போக்குவரத்துச் சேவையில், ஹோட்டலில் அல்லது வைத்தியசாலையில் ஏற்படுகின்ற சுற்றாடல் ரீதியான தாக்கங்களைக் குறைத்தல்).

✷ தொழில் முயற்சி அல்லது தொழிற்சாலையில் ஓர் அலகிற்காகப் பாவிக்கப்பட்ட மூலப்பொருட்களின் அளவு மற்றும் வெளியிட்ட கழிவுப்பொருட்களின் அளவு எந்தளவுக்குக் குறைக்கப்பட்டுள்ளதென்பதற்கமையத் தூய உற்பத்திப் பிரயோகத்தின் வெற்றி அளவிடப்படும்.

✷ அனைத்துவிதமான கழிவுப்பொருட்களும் பணமே என்பதைத் தூய உற்பத்தி மூலமாக ஞாபகமுறுத்தல்.

✷ தூய உற்பத்தியில் சுற்றாடல் முகாமை, தூய தொழில்நுட்பம் (CLEANER TECHNOLOGY), கழிவுப்பொருட்களைக் குறைத்தல் மற்றும் பிறகோட்பாடுகள் அடங்குகின்றன. தொழில் முயற்சி நோக்கங்கள் மற்றும் சுற்றாடல் நோக்கங்கள் ஆகிய இருவிதமான நோக்கங்களையும் ஈடேற்றிக் கொள்வதே இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

✷ முன்னேற்றப்பட்ட (அதாவது பழக்கவழக்கங்களும், உளப்பாங்கும் மாற்றப்பட்ட) வீட்டுவாசல் நிர்வாகம், உற்பத்திச் செயற்பாட்டின் நிருவாகத்தை மேம்படுத்தல், இருக்கின்ற சாதனங்களில் மாற்றமேற்படுத்தல், தூய நுணுக்க முறைகளைச் சேர்த்துக்கொள்ளல், மூலப்பொருள் மற்றும் முடிவுப்பொருள் திட்டங்களை மாற்றுதல், துணை உற்பத்திகளுக்காகக் கழிவுப்பொருட்களைப் பயன்படுத்துதல் முதலியவற்றின் மூலமாகவே தூய உற்பத்தியின் நோக்கங்கள் ஈடேற்றப்படமுடியும்.

✷ தூய உற்பத்திக்காக ஒரு தனியாள் ஆற்றக்கூடிய பங்கு அளப்பரியது.

✷ தூய உற்பத்தியினூடாக உற்பத்தித்தரம் உயர்வடையும்.

✷ உற்பத்திகளின் போட்டிநிலை தூய உற்பத்தி மூலமாக அதிகரிக்கப்படும்.

✷ மூலப்பொருட்களைக் குறைவாகப் பாவிப்பதாலும், கழிவுப்பொருட்களின் வெளியேற்றம் குறைவாகக் காணப்படுவதாலும் தூய உற்பத்தியினூடாக நெறிப்படுத்தல் செலவுகள் குறைவடையும்.

✷ சுற்றாடல் ரீதியிலான பொறுப்புக்களை ஏற்கவிரும்பும் கொள்வனவாளர்களுக்கான சந்தை வாய்ப்புத் தூய உற்பத்தி மூலமாக உருவாகின்றது.

✷ தூய உற்பத்தியினூடாகத் தொழில் முயற்சி அல்லது தொழிற்சாலைப் பணியாளர்களின் தொழில் நிலைமைகள் மேம்படுத்தப்படும், அவர்களுக்கு நேரிடக்கூடிய ஆபத்துக்களும், விபத்துக்களும் குறைவடையும்.

✷ தூய உற்பத்தியின் மூலமாகத் தொழில் முயற்சி அல்லது கைத்தொழில் பற்றிய மக்களின் உளப்பாங்கு சாதகமானதாக அமைக்கப்படும்.

✷ கழிவுப்பொருட்களுக்கான தீர்வுகாணும் செலவுகள் தூய உற்பத்தியின் மூலமாகக் குறைக்கப்படும். இதனூடாகச் செலவுகள் குறைவடையும், சுற்றாடல் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுதல் இலகுவாக்கப்படுகின்றது.


✷ தூய உற்பத்தியினூடாகத் தொழில் முயற்சியின் அபாயங்கள் குறைக்கப்படும். வங்கிக்கடன் மற்றும் காப்புறுதிக் காப்பீட்டினைப் பெற்றுக்கொள்வது இதனூடாக மிகவும் இலகுவாக்கப்படும்.

### தூய உற்பத்தி பொதுமக்களுக்கு ஏன் முக்கியத்துவம் வாய்ந்தது?

தொழில் முயற்சியாளர்களைப் போன்றே பொது மக்களுக்கும் தூய உற்பத்தி முக்கியமானதாக அமையப் பல்வேறு காரணங்கள் நிலவுகின்றன. அவையாவன:

கைத்தொழில்கள், போக்குவரத்து, கமத்தொழில், சுற்றுலாத்துறை அத்துடன், பிறதொழில் முயற்சிகளினூடாக நிகழும் சுற்றாடல் மாசுபாடு காரணமாகப் பொதுமக்களின் உடல் நலத்திற்குப் பெரிதும் அச்சுறுத்தல் தோன்றுகின்றது.

*(அடுத்த வாரம் தொடரும்)*




தருவது:
**வர்த்தகக் கைத்தொழில் சம்மேளனம்.**

# வன்னிப் பிரதேசத்தில் கால்நடை அபிவிருத்தி

பேராசிரியர் அ.நவரத்தினராஜா,
தலைவர், விலங்கு விஞ்ஞானத்துறை
விவசாய பீடம்,
யாழ். பல்கலைக்கழகம்.


இலங்கையில் கால்நடைகளின் எண்ணிக்கை உலர் வலயத்திலேயே அதிகமாகக் காணப்படுகின்றது. எனினும், வடமாகாணத்தைக் கருதும்போது வன்னிப் பிரதேசத்திலேயே குறிப்பிடத்தக்களவு கால்நடைகள் காணப்படுகின்றன. ஆனால், இவற்றில் 85% ஆனவை உள்ளூர் இனங்களாகவும், 15% ஆனவை தரம் உயர்த்தப்பட்ட கால்நடைகளாகவும் காணப்படுகின்றன.

நீண்டகால நோக்கில் உள்ளூர் கால்நடைகளின் தரம் உயர்த்தல் முக்கியமானதாக அமைகின்றது. இவ்வரிசையில் கீழ் வரும் முறைகள் தரம் உயர்த்தலில் பயன்படுத்தப்படுகின்றன.

**1. செயற்கை முறைச் சினைப்படுத்தல் (ARTIFICIAL INSEMINATIOL)**

உள்ளக முறை வளர்த்தலை (INTENSIVE) பின்பற்றுகின்ற இடங்களுக்குச் செயற்கைமுறைச் சினைப்படுத்தல் பொருத்தமானதாகும். அத்துடன், தேவை ஏற்படும்போது வினைத்திறனுடன் கால்நடை மருத்துவத் தேவை வழங்கப்பட வேண்டும். ஆகவே, இச்சினைப்படுத்தல்முறை கிராமப்புறங்களுக்குப் பொருத்தமானதல்ல. ஏனெனில், போதிய மின்சார வசதிகள் இல்லாமை, போக்குவரத்து இடர்பாடுகள், விந்துப்பாயத்தின் கிடைக்கும் அளவு போன்றன செயற்கை முறைச் சினைப்படுத்தலுக்கு மிகவும் தடங்கலாகத் திகழ்கின்றன. வடமாகாணத்தில் தற்போது குளிரூட்டப்பட்ட விந்துப்பாயமே (CHILLED SEMEN) செயற்கைமுறைச் சினைப்படுத்தலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

செயற்கை முறைச்சினைப்படுத்தலை அபிவிருத்தி செய்வதற்கு முக்கிய கட்டம்



வடமாகாணம் முழுவதும் உறைநிலை விந்துப்பாயத்தை (DEEP FROZEN SEMEN) அறிமுகப்படுத்துவதாகும். திரவ நைதரசன் இப்பிரதேசங்களில் போதியளவு விநியோகிக்கப்பட்டால், கிராமப்புறங்களிற்கூட உறைநிலை விந்துப்பாயத்தைச் சினைப்படுத்தலுக்குப் பயன்படுத்தமுடியும். குளிரூட்டப்பட்ட விந்துப்பாயத்தைப் போலல்லாது உறைநிலை விந்துப்பாயம் பல வருடங்களுக்கு வைத்திருக்கமுடியும். எமது அனுபவத்தில் குளிரூட்டப்பட்ட விந்துப்பாயம் எதிர்பார்க்கப்படும் அளவிற்குப் பயனளிப்பதில்லை. இதற்கான காரணம் யாதெனில், குளிரூட்டப்பட்ட விந்துப்பாயத்தை விநியோகிப்பதில் அடிக்கடி ஏற்படும் தடைகள் பண்ணையாளர் மத்தியில் செயற்கைமுறைச் சினைப்படுத்தலில் உள்ள நம்பிக்கையை இழக்கச் செய்கின்றது.


உறைநிலை விந்துப்பாய உற்பத்திக்கு திரவ நைதரசன் வழங்கல் மிகவும் முக்கியமானது. இதற்காக திரவ நைதரசன் பொறி ஒன்றை (LIQUED N PLANT) கொள்வனவு செய்வது சிறந்தது. திரவ நைதரசன் கொள்கலன்கள் 30-40L கொள்ளளவு உடையனவாகவும் வெளிக்கலக் கொள்கலன்கள் 2-3L கொள்ளளவுடையனவாகவும் கொள்வனவு செய்ய வேண்டும். அத்துடன், தனியார்துறையைச் சார்ந்த சினைபபடுத்துநர்களை உறைநிலை விந்துப்பாயத்தைப் பயன்படுத்துவது பயிற்சியளிக்க வேண்டும். அனுபவரீதியில் கருத்தரிப்பு வீதம் உறைநிலை விந்துப்பாயத்தினைப் பார்க்க குளிரூட்டப்பட்ட விந்துப்பாயத்திற்கு அதிகம். தற்போது திருநெல்வேலியில் உள்ள செயற்கைமுறைச் சினைப்படுத்தல் நிலையம் குளிரூட்டப்பட்ட விந்துப்பாய உற்பத்தியில் சில தொழில்நுட் பங்களை உட்புகுத்துவது மிகவும் முக்கியமா னதாகும்.

திருநெல்வேலி நிலையத்தில் பெருமளவில் உள்ளினச் சேர்க்கை (INBREEDING) அவதானிக்கப்பட்டுள்ளது. ஏனெனில், விந்துப்பாய சேகரிப்பிற்குப் பயன்படுத்தப்படும் காளைகள், கடாக்கள் காலத்திற்குக் காலம் மாற்றப்படுவதில்லை. ஆகக்குறைந்தது மூன்று வருடத்திற்கு ஒருமுறையாவது காளைகள் மாற்றப்படவேண்டும்.

குளிரூட்டப்பட்ட விந்துப்பாயத்தைப் பயன்படுத்திச் செயற்கைமுறைச் சினைப்படுத்தலை மேற்கொள்ளும்போது முக்கிய குறிக்கோள் யாதெனில் செயற்கைமுறைச் சினைப்படுத்தல் மூலம் பிறக்கும் கன்றுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதேயன்றி சினைப்படுத்தலின் எண்ணிக்கையை மாத்திரம் அதிகரிப்பதல்ல. மேற்குறிப்பிட்ட இலக்கை அடைவதற்கு கால்நடைகள் செறிவாக உள்ள இடங்களிற்குச் செயற்கை முறைச் சினைப்படுத்தல் சுற்றுக்களை (AL CIRCUITS) உருவாக்க வேண்டும். துவிச்சக்கர வண்டிகளை அல்லது மோட்டார்வண்டிகளைப் பயன்படுத்திச் செறிவான முறையில் சினைப்படுத்தலை மேற்கொள்ளமுடியும். இதனால் செயற்கைமுறைச் சினைப்படுத்தல் சேவை அதிகரிக்கும். அத்துடன், முன்னேற்றகரமான கால்நடைப்பண்ணை முகாமைத்துவத்தையும் கடைப்பிடித்தல் வேண்டும். செயற்கை முறைச்சினைப்படுத்தலை மேற்கொள்கின்ற சினைப்படுத்துநர்கள், கால்நடை மருத்துவர்கள் பண்ணையாளர்களுக்கு வேட்கையை உரிய நேரத்தில் கண்டறிவது சம்பந்தமான முழுமையான விளக்கங்களை வழங்குவது மிகவும் அவசியமாகும்.

**செயற்கை முறைச் சினைப்படுத்தலின் பின்தொடரும் நடவடிக்கைகள் (AL FOLLOW UP)**

அநேகமான சினைப்படுத்துனர்கள் செயற்கைமுறைச் சினைப்படுத்தலின் எண்ணிக்கையை அதிகரிப்பதுடன் தமது வேலை நிறைவடைந்துவிட்டதாக எண்ணுகின்றனர். ஆயினும், செயற்கைமுறைச் சினைப்படுத்தலின் மூலமாக உருவாகும் கன்றுகளின் எண்ணிக்கையை அதிகரித்தல் முக்கியமானதொன்றாகும். எனவேதான் சினைப்படுத்தலின் விளைவைத் தீர்மானிப்பதில் செயற்கை முறைச் சினைப்படுத்தலின் பின்தொடரும் நடவடிக்கைகள் முக்கியமுடையதாகின்றது. இது கீழ்வரும் திட்டங்களைக் கொண்டுள்ளது.



*1. கருத்தரித்தலுக்கான பரிசோதனை*

இப்பரிசோதனை சினைப்படுத்தி 45-60 நாட்களுக்குப்பின் பொதுவாகக் கால்நடை மருத்துவர்களினால் மேற்கொள்ளப்படுகின்றது. தற்போது விலங்குற்பத்தி சுகாதார திணைக்களம் (DEPARTMENT OF ANIMAL PRODUCTION & HEALTH) செயற்கைமுறைச் சினைப்படுத்தலின் பின் தொடரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் கால்நடை மருத்துவர்களுக்கு ஊக்குவிப்புப் பணம் (INCENTIVE) வழங்குகின்றது. அதுபோன்று, செயற்கை முறைச்சினைப்படுத்திலின் மூலம் பிறக்கும் கன்றுகளின் எண்ணிக்கையை அதிகரிப்பவருக்கு ஊக்குவிப்புப் பணத்தை வழங்கலாம். ஒவ்வொரு கருத்தரிப்புப் பரிசோதனைக்கும் பணம் வழங்குவதிலும் பார்க்க, கர்ப்பகால இறுதியில் ஆரோக்கியமான கன்றினை ஈன்ற பின்னர் செயற்கைமுறைச் சினைப்படுத்துநருக்கும் கால்நடை மருத்துவருக்கும் முன்னர் வழங்கியதிலும் பார்க்கக்கூடிய பணத்தை வழங்குதல் மிகவும் சிறந்த ஊக்குவிப்புத் திட்டமாகும். இதன்மூலம் ஆரோக்கியமான கன்றுகள் பிறப்பதற்கு செயற்கைமுறைச் சினைப்படுத்துநரும் கால்நடை மருத்துவரும் உற்சாகமாகச் செயற்படுவதற்கு வழிவகுக்கும்.

கருத்தரிப்புப் பரிசோதனையில் பாலில் புரொஜெஸ்திரோனின் (PROGESTERONE) அளவை சினைப்படுத்தி 20 நாட்களின் பின்னர் பரிசோதிக்க முடியும். இதற்காக புரொஜெஸ்திரோன் பரிசோதிப்புத் தொகுதி (PROGESTERONE KIT) பயன்படுத்தப்படுகின்றது. கருத்தரிப்பின் இவ் ஓமோனின் அளவு கூடுதலாகவும் அல்லாவிடின் இதன் அளவு குறைவாகவும் காணப்படும்.

*2. வளமற்ற விலங்குகளிற்கான சிகிச்சை முகாம்*

ஒவ்வொரு கால்நடை மருத்துவர் அலுவலகத்திற்கும் ஒவ்வொரு வளமற்ற சிகிச்சை முகாம் நிறுவப்படல் வேண்டும். கிராமப்புறங்களிலும்கூட கிழமைக்கு ஒருதடவை அல்லது இரண்டு, மூன்று நாட்களுக்கு ஒருமுறை இத்தகைய முகாமைத்துவ வளமற்ற விலங்குகளை அல்லது நிரந்தர வளமற்ற விலங்குகளுக்குச் சிகிச்சை வழங்கலாம். ஒவ்வொரு கால்நடை மருத்துவரும் ஆகக்குறைந்தது மூன்று மணி நேரமாவது ஒவ்வொரு கிராமப்புற மருத்துவ நிலையத்திலும் செலவழிக்க வேண்டும்.

**இயற்கை முறைச்சினைப்படுத்தல். NATURAL INSEMINATION**

*காளை, கடா நிலையங்களை நிர்மாணித்தல்*

செயற்கைமுறைச் சினைப்படுத்தல் போன்று இயற்கைமுறைச் சினைப்படுத்தலுக்கும் முக்கியத்துவம் வழங்க வேண்டும். தற்போது செயற்கை முறைச்சினைப்படுத்தல் மிருக வைத்திய நிலையங்களுக்கு அண்மித்த பிரதேசங்களிலேயே இடம்பெறுகின்றது. அத்துடன், இப்பிரதேசங்களில் போக்குவரத்து வசதிகள், மின்சார, குளிர்சாதன வசதிகள் உள்ளன. ஆனால், பெரும்பான்மையான இனவிருத்தி குடித்தொகை இயற்கைமுறைச் சினைப்படுத்தலுக்கே உட்படுகின்றது. எனவே, இயற்கைமுறைச் சினைப்படுத்தலுக்கு முன்னுரிமை வழங்கப்படல் வேண்டும்.

யாழ்.மாவட்டத்தில் தீவுப்பகுதிகள், வடமராட்சி கிழக்கு, தென்மராட்சி பகுதிகளில் காளை, கடா நிலையங்கள் அமைக்க முடியும். இதேபோல் வன்னிப்பிரதேசத்தில் செயற்கைமுறைச் சினைப்படுத்தலை மேற்கொள்ளாத பகுதிகளில் இந்நிலையங்களை நிர்மாணித்தல் மிக முக்கியமானதொன்றாகும்.

யாழ்.குடாநாட்டில் செயற்கைமுறைச் சினைப்படுத்தலை மேற்கொள்ளும் பகுதிகளிலும்கூட கடா நிலையங்கள் அமைத்தல் வேண்டும். இதேபோன்று, செம்மறி ஆட்டினைத் தரம் உயர்த்துவதற்கு இயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையங்கள் அமைக்கப்படலாம். இந்நிலையங்கள் RED MADRAS, BANNUR போன்ற வர்க்கங்களைக் கொண்டிருக்கும் மேற்கூறப்பட்ட நிலையங்கள் LIBCO இனால் நிர்வகிக்கப்படும். தேவையான காளைகளை, கடாக்களை விலங்குற்பத்தி சுகாதாரத் திணைக்களம் வழங்கும். இயற்கைமுறைச் சினைப்படுத்தலுக்கு நியாயமான விலையை LIBCO பெற்றுக்கொள்ளும். இவ்விலங்குகளிற்குத் தேவையான செறிதீவனம், மருந்து வைத்திய சேவைகள் LIBCO வினால் ஒழுங்காக்கப்படும். ஒவ்வொரு சினைப்படுத்தும் நிலையத்திற்கும் பொறுப்பாகப் பயிற்சி பெற்ற, படித்த விவசாயக் குடும்பத்தைச் சார்ந்த இளைஞன் ஒருவனை நியமிக்க வேண்டும். அத்துடன், சினைப்படுத்தலுக்கு உபயோகிக்கும் விலங்குகள் காலத்திற்குக் காலம் மாற்றப்படல் வேண்டும். சினைப்படுத்தும் நிலையப்பொறுப்பாளர் இயற்கை முறைச்சினைப்படுத்தலின் மூலம் பிறந்த கன்றுகள் பற்றிய குறிப்புக்களை பராமரித்தல் வேண்டும். அத்துடன் இக்கன்றுகளைப் பதிவு செய்யவும் வேண்டும்.

**திட்டமிட்ட இனவிருத்தி (PLANNED BREEDING)**

வன்னிப்பிரதேசத்தில் பரந்தளவிலான கால்நடைத் தரமுயர்த்தலுக்காகச் செயற்கைமுறைச் சினைப்படுத்தலை அறிமுகப்படுத்தத் திட்டமிட்டுள்ளது. பொதுவாக, வெப்பவலயக் காலநிலை நிலவும் பிரதேசங்களில் மார்கழி, தை மாதங்களில் பெரும்பாலான கன்று ஈனுதலைத் திட்டமிடுதல் விரும்பத்தக்கது.

ஏனெனில், மேற்குறிப்பிட்ட மாதங்களிலேயே புற்களின் கிடைக்குமளவு அதிகமாகவுள்ளது. இதனால் தாய் விலங்குகள் போதியளவு ஊட்டச்சத்துக்களை புற்களிலிருந்து பால் உற்பத்திக்குப் பெறக் கூடியதாகவுள்ளது. அத்துடன், அநேகமான கன்று ஈனல்கள் இயற்கையாகவே மேற்குறிப்பிட்ட மாதங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது.

(அடுத்த வாரம் தொடரும்)

## குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | சாவகச்சேரி | மருதனார்மடம் | சுன்னாகம் | நெல்லியடி | யாழ்ப்பாணம் | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 30/- | 40/- | 40/- | 40/- | 50/- | 60/- |
| உருளைக்கிழங்கு | 80/- | 65/- | 60/- | 60/- | 75/- | 60/- |
| கத்தரிக்காய் | 40/- | 30/- | 30/- | 60/- | 40/- | 40/- |
| பாவற்காய் | 40/- | 30/- | 25/- | 40/- | 50/- | 40/- |
| வெண்டைக்காய் | 30/- | 20/- | 10/- | 40/- | 30/- | 30/- |
| முருங்கக்காய் | 140/- | * | 260/- | * | 120/- | 200/- |
| கரட் | 50/- | 50/- | 40/- | 60/- | 60/- | 60/- |
| பீற்றூட் | 40/- | 30/- | 40/- | 40/- | 40/- | 40/- |
| வெங்காயம் | 25/- | 20/- | 20/- | 25/- | 30/- | 25/- |
| பச்சைமிளகாய் | 40/- | 40/- | 40/- | 60/- | 40/- | 50/- |

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

*செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோடு*
*எய்த உணர்ந்து செயல்.*

*- திருக்குறள்.*

# நமது நோக்கு

## மதிக்கப்படாத அர்ப்பணிப்பும் சிதைக்கப்படும் அமைதியும்!

கிழக்குக் கடற்பரப்பில், சர்வதேசக் கடற்பிராந்தியத்தில் சென்றுகொண்டிருந்த விடுதலைப் புலிகளின் வர்த்தகக் கப்பல் - சர்வதேச நெறிமுறைகளை மீறித் தாக்கி அழிக்கப்பட்டதும், கடற்பயணத்தில் நீண்ட கால அனுபவம்பெற்ற போராளிகள் பதினொரு பேர் உயிரிழந்ததும் - அமைதி முயற்சிகளில் பாரதூரமான பாதிப்பை ஏற்படுத்தியிருப்பதோடு, தமது பொறுமையைச் சோதிப்பதாகவும் அமைந்திருப்பதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதுபோன்ற சம்பவங்கள் - சமாதானச் சூழலைச் சீர்குலைக்கக் கூடியனவென்பதையும், விடுதலைப் புலிகளை ஆத்திரமூட்டக் கூடியனவென்பதையும் - நன்றாகத் தெரிந்த நிலையில் - வேண்டுமென்றே, மிகத் திட்டமிட்ட வகையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கும் நிலையில் -

விடுதலைப் புலிகள் அசாத்தியமான பொறுமை காட்டி வருவது - மக்களுக்காகவே என்பதை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், கிளிநொச்சியில் நடந்த - தமிழீழ நீதிமன்ற வளாகத் திறப்புவிழாவில் வலியுறுத்திப் பேசியிருக்கிறார்.

'கப்பல் அழிக்கப்பட்ட சம்பவத்தை வைத்துக் கொண்டு யுத்தத்தை நாம் ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால், யுத்தத்தை ஆரம்பிக்கவில்லை. ஆரம்பிக்கப் போவதுமில்லை. ஏன்? உங்களுக்காக, எங்களால் முடிந்தளவு பொறுமையைக் கடைப்பிடித்து வருகிறோம்' எனத் தெரிவித்திருக்கிறார் அன்ரன் பாலசிங்கம்.

படையினரின் தொடர்ச்சியான, தீவிரமான யுத்த நிறுத்த மீறல்களால் - ஆத்திரமூட்டப்பட்டபோதும் - விடுதலைப் புலிகள் அமைதி வழியில் காட்டிநிற்கும் இந்த அர்ப்பணிப்பும் விசுவாசமும் - சர்வதேசத்திற்கும் தெளிவாகவே ஒரு செய்தியைச் சொல்கின்றது.

இதன்படியே - விடுதலைப் புலிகளது போராட்டமும் இலக்கும் நியாயபூர்வமானது, நீதியானது என்பதுடன் - தமிழ்மக்களுக்கான ஒரு கௌரவமான தீர்வைப் பெறுவதில் அவர்கள் காட்டி நிற்கும் உறுதியும் - சர்வதேசத்திற்கு விடுக்கும் அறைகூவலாகவே அமைகின்றது.

தமிழ்மக்களின் உரிமைகளுக்காகவும், சுதந்திரமான வாழ்வுக்காகவும் அளப்பரிய தியாகங்களைப் புரிந்த போராளிகளின் பாதையில் - இன்று அமைதிக் காலத்திலும், போராளிகள் தொடர்ந்து உயிர் துறந்து வரவும் - சமாதானத்துக்காகப் புலிகள் பொறுமை காப்பது, மக்களுக்காக அவர்கள் ஆற்றிவரும் அளவிடமுடியாத தியாகம் இன்றும் தொடர்வதையே எடுத்துக் காட்டுகின்றது.

அதேவேளை - விடுதலைப் புலிகளின் அர்ப்பணிப்பையும், உறுதியையும் - பலவீனமாக எடுத்துக் கொள்ள வேண்டாமென்பதையும், இந்த அர்ப்பணிப்பும் உறுதியும் உரியவாறு மதிக்கப்படாவிட்டால், கௌரவிக்கப் படாவிட்டால் - நிலைமை எல்லைமீறிச் சென்றுவிடுமென்பதையும், அரசியல் ஆலோசகர் எச்சரிக்கையுடன் வெளியிட்டிருக்கிறார்.

'பொறுமைக்கும் ஒரு எல்லையுண்டு, குட்டக் குட்ட குனிபவனும் மடையன் என்று சொல்வார்கள' என அறிவித்திருக்கும் அவரது கருத்துக்கள் - சர்வதேசமும், இலங்கை அரசாங்கமும் தீவிரமாகக் கவனத்திற் கொள்ளவேண்டியவையாகும்.

பொறுமையை இழக்காமல், நிதானத்தை இழக்காமல், அமைதிக்காக விடுதலைப் புலிகள் செய்திருக்கும் அற்புதமான தியாகம் உரியவாறு கருத்திலெடுக்கப்படாவிட்டால் -

விடுதலைப் புலிகளை தொடர்ந்தும் ஆத்திரமூட்டி, நியாயந்தவறி அராசாங்கப் படைகள் நடந்து கொள்ளுமானால் -

கடந்த ஒரு வருடமாகக் கட்டியெழுப்பப்பட்டுவந்த அத்தனை நல்லெண்ண முயற்சிகளும், நம்பிக்கையும் - விழலுக்கிறைத்த நீராகிவிடும் ஆபத்து வலுப்பதையே விளைவாக எதிர்நோக்க வேண்டியேற்படும்.

ஒருபுறம் - நேர்மையாக, நிதானமாக, பெரும் அர்ப்பணிப்புடன் சமாதானத்தை உறுதிப்படுத்தப் போராடும் விடுதலைப் புலிகளும், மறுபுறம் -

படையினரைக் கட்டுப்படுத்தும் அதிகாரமற்ற அரசாங்கமும், குதர்க்கமாகவும் - தான்தோன்றித்தனமாகவும் செயற்படும் ஜனாதிபதியும், அடாவடித்தனம் புரிந்து மீண்டும் யுத்தத்தை ஏற்படுத்தியே தீருவோமென கங்கணம் கட்டிநிற்கும் படையினருமாக அமைதியை உறுதிப்படுத்தும் வாய்ப்புக்கள் சிதைக்கப்படுவதை - சர்வதேசம் தொடர்ந்தும் அனுமதிக்கத்தான் போகின்றதா என்பதே - பெரும் வினாவாக எழுந்து நிற்கிறது.

# ஜனாதிபதி சந்திரிகாவும், மகிந்த ராஜபக்ஷவும் மக்களைத் தவறாக வழிநடத்த முனைகின்றனர்

## சமாதானத்தை எதிர்ப்பது வேடிக்கை என்கிறார் பீரிஸ்

எதிர்க்கட்சிகளும், ஜனாதிபதி சந்திரிகாவும் சமாதான முயற்சிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தாலும், மீண்டும் போர் ஏற்படுவதைப் பொதுமக்கள் ஒருபோதும் விரும்பமாட்டார்கள் என்று - நீதி, அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிப்பதற்காக அவர் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் உரையாற்றியபோதே அமைச்சர் பீரிஸ் இவ்வாறு தெரிவித்தார்.

இனப் பிரச்சினைக்குச் சமாதானத்தீர்வு காண உதவுமாறு நோர்வே அரசாங்கத்திற்குப் பொதுஜன ஐக்கிய முன்னணியே அழைப்புவிடுத்தது. அவர்கள் ஆட்சியிலிருந்தபோதே சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால், இப்போது இந்தச் சமாதான முயற்சிகளை நிறுத்துமாறு கோருவது வேடிக்கையாக உள்ளது. பொதுஜன ஐக்கியமுன்னணியும், ஜே.வி.பியும் கூட்டுச்சேர்வதை மக்கள் விரும்பவேயில்லை.

சந்திரிகாவும், மகிந்த ராஜபக்ஷவும் நாட்டு மக்களைத் தவறாக வழிநடத்த முயற்சிசெய்கிறார்கள் என்றும் அமைச்சர் பீரிஸ் குற்றஞ்சாட்டினார்.

# ரயில்களில் பயணம் செய்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு!

இலங்கையின் ரயில் பிரயாணிகளின் எண்ணிக்கை கடந்த வருடம் பெருமளவில் அதிகரித்திருப்பதாக ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த வருடம் ரயில்களில் பயணம் செய்தோரின் எண்ணிக்கை 50 இலட்சமாக இருந்ததாகவும், ரயில்களில் ஏற்றிச்செல்லப்பட்ட சரக்குகளின் மொத்த எடை 2 லட்சம் தொன்னாக இருந்ததாகவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

கடந்தவருடம் ரயில் சேவைகள் மூலம் 16 கோடி ரூபா அதிக வருமானத்தை ரயில்வே திணைக்களம் பெற்றதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# தொழிலற்றோர் வீதம் இலங்கையில் அதிகரிப்பு!

## புள்ளி விபரமதிப்பீட்டுத் திணைக்களம் அறிவிப்பு

இலங்கையில் தொழிலாளர்களின் எண்ணிக்கை 2000 ஆண்டைவிட 2001 ஆம் ஆண்டில் 54 ஆயிரத்தால் குறைவடைந்துள்ளதாகப் புள்ளிவிபர மதிப்பீட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

2001 ஆம் ஆண்டில் தொழிற்படை 6.77 மில்லியனாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இது 2000 ஆம் ஆண்டைவிட 54 ஆயிரம் குறைவாகும்.

இதேவேளை, 2000 ஆம் ஆண்டில் தொழிலற்றோர் வீதம் 7.6 ஆக இருந்தது. இது 2001 ஆம் ஆண்டில் 7.9 வீதமாக அதிகரித்துள்ளது.

2002 ஆம் ஆண்டுக் கணிப்பீடுகளின்படி இலங்கையின் ஆண்களின் சராசரி வயது 70.7 எனவும், பெண்களின் சராசரி வயது 75.4 எனவும், புள்ளிவிபர மதிப்பீட்டுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

# ரணிலின் தனிப்பட்ட செயலாளர் மீது நிதி மோசடி செய்ததாக குற்றச்சாட்டு!

## பிரதமரின் உத்தரவையடுத்து பதவி விலகினார்

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட செயலாளரான சுகத் சந்திரசேகர நிதிமோசடிக் குற்றச்சாட்டு ஒன்றையடுத்து பதவி விலகியிருக்கிறார்.

சுகத் சந்திரசேகர - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட செயலாளராகவும், அவருக்கு நெருக்கமானவராகவும் இருந்துவந்தார். இவரே அமைச்சர்களின் தனிப்பட்ட செயலாளர்களின் சங்கச் செயலாளராகவும் பதவி வகித்து வந்தார்.

இவர் மீது சங்கத்தின் நிதியைத் தவறாகக் கையாண்டதாகக் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டிருந்தது. ஒன்பது மில்லியன் ரூபாவுக்கான கணக்குகளை இவர் ஒப்படைக்கவில்லை.

இதையடுத்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - ஊழலற்ற ஆட்சியை நடத்தும் தமது அரசுக்குக் களங்கத்தை இச்சம்பவம் ஏற்படுத்தும் என்பதால் உடனடியாகச் சங்க நிர்வாகத்தைக் கலைக்குமாறு உத்தரவிட்டார்.

இதையடுத்தே, சுகத் சந்திரசேகர பதவி விலகியுள்ளார். இவர் முன்னர் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டராகப் பணியாற்றியதுடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட பாதுகாவலராகவும் இருந்துவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கருணாநிதி அழைப்புவிடுத்த

# 'பொடா' பற்றிய அனைத்துக்கட்சிக் கூட்டம்; மூன்று முக்கிய கட்சிகள் நிராகரிப்பு!

பொடா சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தும் தமிழக அரசாங்கத்துக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய, திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் மு.கருணாநிதி கூட்டவுள்ள அனைத்துக்கட்சிக் கூட்டத்தில், தாம் கலந்துகொள்ளப்போவதில்லை என்று இந்திரா காங்கிரஸ், மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் ஆகியன அறிவித்துள்ளன.

ம.தி.மு.கவும், தி.மு.கவும் இணைந்து பொடா சட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தன. அத்துடன், விடுதலைச் சிறுத்தைகள் நடத்திய பொடாவுக்கு எதிரான போராட்டத்தில் இக்கட்சிகள் பங்கேற்கவில்லை. இந்த நிலையில் கருணாநிதியின் அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் பங்கேற்கப்போவதில்லை என்றும், முதலில் அவர் பாரதீய ஜனதா கூட்டணியை விட்டு வெளியேவரட்டும் எனவும் தெரிவித்துள்ளார் விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன்.

இவரது கருத்துக்களையே மாக்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, தமிழகக் காங்கிரஸ் என்பனவும் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

# களுத்துறைக் கைதிகள் நிலை தொடர்ந்து மோசமடைகிறது!

(கொழும்பு)

களுத்துறைச் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்து வரும் கைதிகளின் உடல்நிலை தொடர்ந்தும் மோசமடைந்து வருவதாகத் தெரியவருகின்றது.

உண்ணாவிரதம் மேற்கொள்வோரில் - 20 பேரின் நிலை மோசமடைந்ததை அடுத்து சிறையிலேயே அவர்களுக்குச் சேலைன் ஏற்றப்படுவதாகவும் தெரியவருகின்றது.

# நோர்வே வெளிவிவகார அமைச்சரின் இலங்கை விஜயம் திடீரென ரத்து!

நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பற்றர்சன் நேற்று இலங்கைக்கு மேற்கொள்ளவிருந்த விஜயம் திடீரென ரத்துச் செய்யப்பட்டது.

நேற்று கொழும்பு வருவதாக எதிர்பார்க்கப்பட்ட இவர், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அமைச்சர்கள், இராஜதந்திரிகள் ஆகியோரைச் சந்திப்பதுடன், இன்று வன்னிக்குச் சென்று புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் உள்ளிட்டோரைச் சந்திக்கவும் ஏற்பாடாகியிருந்தது.

வளைகுடாவில் ஈராக் மீதான தாக்குதலுக்கு அமெரிக்கா தயாராகி வருவதால்தான், நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பற்றர்சனின் இலங்கை விஜயம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

# தேர்தல் வந்தாலோ, ஆட்சிமாற்றம் வந்தாலோ நாம் யுத்தநிறுத்தத்தை கைவிடப்போவதில்லை

**நேற்று முன்தினம் கிளிநொச்சியில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி.**

கேள்வி: இயல்புநிலையை மேலும் வலுப்படுத்துவதற்குத் தடையாக இருப்பது எது?

பதில்: இயல்புநிலையை வலுப்படுத்துவதற்குத் தடையாக இருப்பது ஆயுதப்படை. இப்போதுகூட சமாதானம் தோன்றியிருக்கிறது. ஆனால், இயல்புநிலை தோன்றவில்லை.

யுத்தநிறுத்தத்தை நிலையானதாக வைத்திருக்கவும், சமாதானப் பேச்சுவார்த்தையை தொடர்ந்து நடத்தவும் இயல்புநிலை அத்தியாவசியமாகின்றது. இயல்புநிலை தோன்றுவதாக இருந்தால், இராணுவம் தனது ஆக்கிரமிப்பைக் கைவிடவேண்டும். இராணுவத்தை நாம் வட - கிழக்கில் இருந்து விலகிச் செல்லக் கேட்கவில்லை.

ஆயுதப்படைகளை இறுக்கமாக வைப்பதற்கு ஜனாதிபதிதான் காரணம். ஜனாதிபதியின் கட்டளையைப் பின்பற்றும் ஆயுதப்படையின் சில பிரிவினரும், கடற்படையும்- அம்மாவின் கட்டுப்பாட்டில் இருக்கின்றது. ஆயுதப்படையிலுள்ள சில தரைப்படைப் பிரிவுகள் - ரணிலின் சொல்லை ஒருவாறு கேட்டாலும், கடற்படையை அவரால் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றது.

கேள்வி: சமாதானப் பேச்சுவார்த்தைகளில் அரசாங்க மட்டத்தில் மாற்றமேற்பட்டால் நிலைப்பாடு என்னவாகும்?

பதில்: அரசாங்கத்தில் மாற்றம் ஏற்பட்டால், யார் அதிகார பீடத்தில் வருவார்கள் என்பதில்தான் அது தங்கியிருககிறது. சமாதானத்தை விரும்புகின்றவர்கள், புலிகளுடன் பேசிப் பிரச்சினையைத் தீர்ப்பவர்கள் - ஆட்சிக்கு வந்தால், நாங்கள் அவர்களுடன் பேசத்தயாராக இருக்கிறோம். ஆனால், புலிகளுக்கு விரோதமாக, சமாதானத்துக்கு முரண்பாடானோர் - உதாரணமாக ஜே.வி.பி போன்ற சக்திகள் - ஆட்சிக்குவந்தால், சமாதானத்தைத் தொடர்ந்து மேற்கொள்வது கடினமாகும்.

நாங்கள் ஒரு தேர்தல் வந்தாலோ, அதில் ஆட்சி மாற்றம் வந்தாலோ போர்நிறுத்தத்தைக் கைவிடமாட்டோம். போர்நிறுத்தத்தை இறுகப்பிடித்துக்கொண்டு ஆட்சியில் வருபவர்கள் என்ன நிலைப்பாடு எடுக்கின்றார்கள் என்பதைப் பார்ப்போம் - அவர்கள் போர்தான் வழி என்று நினைத்து போரைத் தொடங்கினால், நாங்கள் போர்ப்பாதைக்குச் செல்வதைத் தவிர வேறுவழியில்லை.

கேள்வி: தாக்கப்பட்ட கப்பல் பற்றி விடுதலைப்புலிகள் மட்டத்தில் எவ்வாறு நோக்கப்படுகிறது?

பதில்: இது சர்வதேசக் கடற்பரப்பில் ஒரு வர்த்தக நோக்கத்தோடு சென்ற- வர்த்தகக் கப்பலைத் தடுத்து நிறுத்தி, தாக்கி அழித்த பாரதூரமான விடயம். அதிலும், போராளிகள் மரணத்தைத் தழுவிக்கொண்டது பரதூரமான விடயம். இப்படியான சம்பவங்கள் தொடர்ந்து நடந்தால், சமாதானப் பேச்சுவார்த்தைகளில் நிகழும் சுமுகமான இயல்புநிலை மற்றும் பரஸ்பர நம்பிக்கையை உண்டாக்கும் நிலைமை பாதிப்படையும்.

அதாவது, கண்காணிப்புக்குழு மூலம் கடற்படை நடவடிக்கையை நிறுத்தச்சொல்லி, நாங்கள் பேச்சு நடத்திக்கொண்டிருந்த நேரத்தில், கடற்படையினர் இந்தக் கப்பல் மீது தாக்குதலை நடத்தி, கப்பலை தீ வைத்து எரித்து, மூழ்கடித்தும் விட்டார்கள். கண்காணிப்புக்குழுவால் ஒன்றும் செய்யமுடியவில்லை. ரணில் விக்கிரமசிங்கவினால் ஒன்றும் செய்யமுடியவில்லை. பாதுகாப்பு அமைச்சர் என்ற பேருக்கு ஒருவரை வைத்திருக்கின்றார்கள். அவராலும் ஒன்றும் செய்யமுடியவில்லை. சந்திரிகா அம்மையாரின் உத்தரவு இருக்கும்வரை இப்படியான சம்பவங்கள் நிகழும் என்று எங்களுக்கு ஒரு அச்சம் இருக்கிறது. இதனால், பேச்சுவார்த்தைகளில் சுமுகமான பரஸ்பர நம்பிக்கை, இயல்புநிலை பாதிப்படையும்.

கேள்வி: பேச்சுவார்த்தைகள் நடக்கும்போது இப்படியான சம்பவங்கள் ஏற்படுகின்றன. அதுபற்றி என்ன கூறவிரும்புகின்றீர்கள்?

பதில்: பேச்சுவார்த்தைகள் ஒவ்வொரு மாதமும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதேவேளை, உபகுழுக்களின் பேச்சுக்கள் வாரத்திற்கு - மாதத்திற்கு இரண்டு தடவை என்று பேச்சுவார்த்தைகள், பல மட்டங்களில், பரிமாணங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆனபடியால், பேச்சுவார்த்தை நேரத்தில்தான் இப்படியான சம்பவங்கள் நடைபெறுவதாக இல்லை. இது தொடர்ச்சியாக நடந்துகொண்டிருக்கிறது. சில சமயங்களில் பேச்சுவார்த்தைகளுக்கு முன்னாகவும், பேச்சுவார்த்தை நடைபெறும் போதும், பேச்சுவார்த்தையின் பின்னரும் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடக்கின்றன. பேச்சுவார்த்தையைப் பாதிக்கின்ற நோக்குடன் சில சமயங்களில் இப்படியான சம்பவங்கள் திட்டமிட்டுச் செய்யப்படலாம்.

கேள்வி: இந்தச் சம்பவத்தால் விடுதலைப்புலிகள் கடும்போக்கை மேற்கொள்வார்களா?

பதில்: இதுவிடயமாக நாங்கள் கடும்போக்கைக் கடைப்பிடிப்பதா



கலாநிதி
அன்ரன் பாலசிங்கம்

கச் சொல்வதைவிட அரசாங்கத்திடம் இருந்தும், கண்காணிப்புக் குழுவினரிடம் இருந்தும் சில உறுதிப்பாடுகளைக் கேட்போம். அரசாங்கத்தைவிட- கண்காணிப்புக்குழுதான் எங்களுக்கு இந்த உறுதிப்பாட்டைத் தரவேண்டும்.

உறுதிப்பாடு என்றால் மேற்கொண்டு இப்படியான சம்பவங்கள் நிகழக்கூடாது. மற்றது, யுத்தநிறுத்த மீறல் சம்பவங்களைபக் கண்காணித்து அவர்கள்தான் நீதி வழங்கவேண்டும். இரண்டு தரப்பும் கண்காணிப்புக்குழுவின் இறுதியான தீர்ப்புக்குக் கட்டுப்படுபவர்களாக இருக்கவேண்டும். இல்லாவிடில் இந்த ஒப்பந்தத்தில் அர்த்தம் இல்லை. கடற்படை- யுத்தநிறுத்தத்தை மீறி, அதிகாரம் செலுத்துவது என்றால், போர்நிறுத்த உடன்பாடு தேவையில்லை. கண்காணிப்புக்குழுவும் தேவையில்லை.

கேள்வி: இந்தச்சம்பவத்தின் பின்னர் விடுதலைப்புலிகளின் எதிர்கால நடவடிக்கைகள் எப்படியாக அமையும்?

பதில்: நடக்கும் ஒவ்வொரு சம்பவமும் தமிழ்மக்கள் சமாதானத்தில் வைத்திருந்த நம்பிக்கையைக் குறைத்துக்கொண்டே வருகின்றது. ஆனால், அதேவேளை - எமது மக்களுக்கு அதுபற்றிய நம்பிக்கை குலைந்துபோனாலும், சமாதானம் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படவேண்டும் என்பதை விரும்புகின்றனர். தொடர்ந்து புதிய யுத்தத்திற்குப் போகவேண்டும், பதில் தாக்குதல் நடத்தவேண்டும் என்று மக்கள் விரும்பவில்லை. நாம் பொறுமையாக இருந்து இந்தச் சமாதான முயற்சியைத் தொடர்வதைத்தான் மக்கள் விரும்புகிறார்கள். மக்களுககாகத்தான் சமாதானத்தைப் பேணுகின்றோம்.

இந்தச்சம்பவத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டு, யுத்தத்தைத் தொடங்குவது அர்த்தமில்லை. சமாதானத்தால் பெறுகின்ற பலன்கள் எல்லாம் முக்கியமானது. இனிமேற்கொண்டு யுத்தம் ஒன்று வந்தால், பெரிய சங்கடமான விடயம்.

அடுத்தது, ரணில் விக்கிரமசிங்காவின் அரசு- ஏதோ தமிழ் மக்களுக்கு நீதி வழங்கவேண்டும் என்று இருக்கிறது. இந்த அரசு கலைக்கப்பட்டால் அல்லது வேறு ஒரு தலைமை வந்தால் இந்த சமாதானத்திற்கு எதிர்காலம் இல்லை.

# கடற்படையின் அச்சுறுத்தல் போதாதென்று இந்தியாவாலும் சுரண்டப்படும் மீனவர்கள்!

தமிழ்நாட்டு மீனவர்கள் மன்னார் கடலில் மீன்பிடிப்பதனால், மன்னார் மீனவர்களிற்குப் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன என்று பல ஆண்டுகளாகவே மன்னார் மீனவர்கள் முறையிட்டு வந்தார்கள். இவர்களின் முறைப்பாட்டிற்குச் சாதகமான பதில் கிடைக்காத நிலையில், தாங்களே பதில் நடவடிக்கையினை அண்மையில் மேற்கொண்டார்கள்.

இதனால், மன்னார் மீனவர்களுக்கும் - தமிழக மீனவர்களுக்கும் இடையில் கடலில் கைகலப்பு ஏற்பட்டது. இதன்போது இருதரப்பிலும்



தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இந்திய மீன்பிடிப் படகுகள்.

காயமடைந்த மீனவர்கள், மன்னார் வைத்தியசாலையில் சிகிச்சைபெற வேண்டிய வேதனைக்குரிய நிகழ்வாக, மன்னார் கடலில் மீனவர்களுக்கிடையிலான கைகலப்பு தீவிரமானது.

தமிழக மீனவர்களை - மன்னார் மீனவர்கள் தாக்கவேண்டிய நிர்பந்தம் எப்படியேற்பட்டது? இது தொடர்பாகத் தமிழக மீனவர்கள் சிலவிடயங்களைப் புரிந்துகொள்ள வேண்டும். ஈழத்தில் கடும்போர் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை., கடலிலே ஈழத்து மீனவர்கள் மீன்பிடித்தொழிலைச் செய்வது முடியாததொன்றாக இருந்தது.

இதனால், தமிழர் தாயகப்பிரதேச மக்கள் பட்ட துன்பமோ மிகவும் கொடுமையானதாகும். கடலிலே இறங்குவதற்குக் கடல் வலயத் தடைச்சட்டம், கடற்தொழில் செய்து கொண்டிருக்கும்போது கைது செய்யப்பட்டமை, தாக்கிக் கொல்லப்பட்டமை போன்ற ஏராளமான கொடுமைகளைக் கண்டு அவலப்பட்டவர்கள் ஈழத்தமிழ் மீனவர்கள்.

தொழில்செய்ய முடியாது, நிவாரணத்துக்காகக் கையேந்தி நிற்க வேண்டிய நிலை போன்ற பாதிப்புக்களைச் சந்தித்த ஈழத்தமிழ் மீனவர்கள்- தமிழ்நாட்டு மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடிப்பாலும் பாதிப்புக்களைச் சந்தித்தார்கள். இந்தப் பாதிப்புக்கள் தொடர்பாக இந்திய, இலங்கை அரசுகளிடம் நடவடிக்கை எடுக்குமாறு முறையிட்டும் பயன் எதுவும் இல்லாத நிலையிலேயே, மன்னார் மீனவர்கள் தாமே நடவடிக்கையில் இறங்க நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

தமிழக மீனவர்களைப் பல தடவை பிடித்து, மன்னாரில் பொலிஸாரிடம் ஒப்படைத்தார்கள். பொலிஸாரும்- நீதிமன்றத்தில் ஆஜர் படுத்திப் பின்னர் விடுதலை செய்வது மட்டுமே நடைபெற்றது. மன்னார் மீனவர்களுக்குத் தீர்வெதுவும் கிடைக்கவில்லை.

மன்னார் மீனவர்களுக்கு இரவிலே தொழில் செய்வதற்குத் தடையிருப்பதனால், பகலிலே கடலில் வலைகளைப் போட்டு அடுத்தநாள் வலைபார்க்க வேண்டிய நிலைமை இருந்தது. இந்த மாதிரியான நிலைமைகளிலும் தமிழ்நாட்டு மீனவர்கள் இரவில் ரோலர்கள் மூலம் மீன்பிடிக்க மன்னார் கடலுக்குள் வந்துவிடுவதனால், மன்னார் மீனவர்களின் வலைகள் நாசமாகிவிடுகின்றன.

ஏற்கனவே தொழில் செய்ய முடியாது பாதிப்புக்களைச் சந்தித்தவர்கள், தொழில் உபகரணங்களை இழக்கவேண்டிய பரிதாபநிலைக்கும் தள்ளப்பட்டார்கள்.

இலங்கைக் கடற்படையினர் முழுநேர உஷார்நிலையில் இருந்தபோதும் - இந்திய மீனவர்களின் அத்துமீறிய நடவடிக்கையினைக் கண்டும் காணாமல் விட்டுவிட்டார்கள்.

கடற்படையினரிடம் மன்னார் மீனவர்கள் முறையிட்டால் - அதற்குக் கடற்படை அதிகாரிகள் கூறியுள்ளனர்- "இந்தியா பெரிய நாடு, அவர்களின் இதுபோன்ற செயற்பாடுகளை ஒன்றும் செய்யமுடியாது" என்று. ஆக மொத்தத்தில் எவருமே நடவடிக்கை எடுக்காதபட்சத்திலேயே மன்னார் மீனவர்கள் தங்களுடைய வயிற்றைக்கழுவும் தொழிலுக்கு ஆப்பு வைப்பதை எதிர்த்தார்கள்.

வேறுவழியில்லாமல் மன்னார் மீனவர்கள் மேற்கொண்ட செயலை, தமிழ்நாடு அரசு கண்டித்தது. தலைமன்னாரை முற்றுகையிடுவோம் என்று மிரட்டுகின்றனர். மன்னார் மீனவர்கள் - கைவைக்கும் அளவிற்குத் தமிழ்நாட்டு மீனவர்கள் அத்துமீறி ஈழக்கடலுக்குள் நுழைந்தார்கள் என்பதைப் படம் பிடித்துக் காட்டத் தேவையில்லை. தமிழ்நாடு மீனவர்களே ஒத்துக்கொள்கிறார்கள்.

எது எப்படியான போதும், அரசுகளின் அக்கறையின்மையால் ஒரு தாய் - பிள்ளைகள் போலுள்ள ஈழத் தமிழ் மீனவர்களும், தமிழ்நாட்டு தமிழ்மீனவர்களும் மோதிக்கொள்வது மாற்றானின் அரசியல் இலாபத்திற்காக அடிபடுவதுபோலவேயுள்ளது. ஆகவே, புரிந்துணர்வுடன் செயற்பட்டு மனச்சாட்சிக்கு விரோதமாக நடக்காமல் விடுவதே வரவேற்கத்தக்கதாகும்.

தொழில் என்பது ஒரு மனிதனின் வாழ்க்கையில் முக்கியமானது. தொழிலுக்கான உரிமை பறிக்கப்படும்போதும், தொழில் செய்வதற்கு இடையூறு வரும்போதும்- போராட்டம் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்படுவது வழமையே. இங்கு நிலைமை சிக்கலாக உள்ளதனால், இருதரப்பினரும் ஒருவரையொருவர் புரிந்துணர்வுடன் நடத்த அக்கறைகொள்ள வேண்டும். அப்படி நடந்துகொள்வது காலத்தின் தேவையாகும்.

மன்னார் மீனவர்கள் தமிழ்நாட்டு மீனவர்களைத் தாக்கிவிட்டார்கள், கடத்திக்கொண்டு சென்றுவிட்டனர், பெற்றோல்குண்டுத் தாக்குதலை மேற்கொண்டார்கள், இது மோசமான செயல், கண்டிக்க வேண்டும், தண்டிக்க வேண்டும் என்றெல்லாம் சொன்னவர்கள், தமிழகமீனவர்கள் பலரை- இலங்கைக் கடற்படையினர் சுட்டுக்கொன்றபோது எங்கே தலையைப் புதைத்து வைத்திருந்தார்கள் இந்தத் தமிழக அரசியற் தலைவர்கள்?.

மன்னார் மீனவர்களின் பிரச்சினைக்குத் தீர்வெதுவும் வழங்காது, தமிழக மீனவர்களை உடனடியாக விடுவித்ததை வன்னி நாடாளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் எதிர்த்துக் கருத்து வெளியிட்டுள்ளார். அத்துடன், கடந்த 10 ஆம் திகதி மன்னாரில் மீனவர்களுக்குத் தீர்வொன்று வேண்டுமென்று போராட்டம் ஒன்றும் மேற்கொள்ளப்பட்டது.

இதில் - தமிழகத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள மன்னார் மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் மீண்டும் தரப்படவேண்டும், தமிழகச் சிறைகளில் அடைத்து வைத்துள்ள ஈழத்தமிழ் மீனவர்களைத் தாமதிக்காது விடுதலைசெய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்தப் பேரணி மன்னார் மாவட்ட மீனவர் சமூகத்தினால் மேற்கொள்ளப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதனும், சிவசக்தி ஆனந்தனும் இதில் கலந்துகொண்டு, தமது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளனர்.

இலங்கையைச் சுற்றிவரக் கடலிருக்க, கடற்தொழில் செய்வதற்கு மட்டும் தடைகள் உள்ளன. தமிழர் தாயகப் பிரதேசத்தில் இந்தத் தடைகளால் தமிழ் மீனவர்கள் பொருளாதாரரீதியாகப் பாதிக்கப்பட்டனர், உயிரழிவுகளைச் சந்தித்தனர், காயமடைந்தனர், வயிற்றுப் பசியைத் தீர்க்கத் துன்பப்பட்டனர்.

இன்றைய அமைதியான சூழ்நிலையிலும் இந்த அவலமான சூழ்நிலை தொடர்வதை, நியாயமாகச் சிந்திக்கக்கூடியவர்கள் அனுமதிப்பார்களா?

கனகரவி




# ஐ.சி.சி. உலகக் கிண்ணம் - 2003




## எழுவோம்! எழுவோம்!!

சென்ற உலகக்கிண்ணப் போட்டிகளில் ஒரு கலக்குக் கலக்கி, இறுதிப்போட்டியில் அவுஸ்திரேலிய அணியிடம் பரிதாபமாகத் தோற்றவர்கள் பாகிஸ்தான் அணியினர்.

அந்த உலகக்கிண்ணப் போட்டிகளில் அவர்கள் தோற்ற விதம், அவர்கள் மீது பலத்த சந்தேகங்களைத் தோற்றுவித்தது மட்டுமன்றி, அச் சந்தேகங்களை வலுப்பெறவும் செய்தது. இம்முறை உலகக்கிண்ணப் போட்டிகளின்போது இவர்கள் SUPER SIX இற்கே தெரிவுசெய்யப்படாமல், நாடு திரும்பிய விதத்திலும் பலத்த சந்தேகங்கள் தோன்றியுள்ளன.




வாசிம், வக்கார் - ஏட்டிக்குப் போட்டி!

பொதுவாகவே, பாகிஸ்தான் அணியின் ஒற்றுமையின்மை உலகறிந்த உண்மை. இந்த அணிக்குள்ள முக்கிய குறைபாடு, கிரிக்கெட் சம்பந்தமான அலுவலர்கள் அடிக்கடி மாற்றப்படுவது. அவர்கள் TEAM MANGER, COACH, TEAM CAPTAIN யாராக இருந்தாலும் சரி, கண்டபடி மாற்றப்படுவார்கள். அணித் தலைவர்கள் பலர் ஒன்றுசேர ஆடிய அணி என்றாலும், பாகிஸ்தான் அணியையே குறிப்பிடலாம். அப்படி ஒரு பெருமை அவர்களுக்கு.

ஆரம்ப காலங்களிலே WASIM - WAQUAR ஜோடி ஒற்றுமையாகத்தான் இருந்தது. ஆனால், போட்டி, பொறாமை இருவருக்கிடையேயும் வலுத்து, இன்று அணி தோற்றாலும் பரவாயில்லை, தம்முடைய வரட்டுக்கௌரவம் தான் முக்கியம் என்ற கோதாவில், இவர்கள் இருவரும் ஆடியதை கிரிக்கெட் ரசிகர்கள் மறக்கமாட்டார்கள். இருவரும் BOWLERS தானே. அதனால்தான் இவ்வளவும். பாகிஸ்தானுக்கு இம்முறை WORLD CUB கசப்பான அனுபவங்களைத் தந்திருக்கின்றது.

**P.N.சுதர்சன்**

'கூண்டோடு கைலாசம்'போல பலர் தங்களுடைய திடீர் ஓய்வினை அறிவித்திருக்கிறார்கள். இவர்களில் சயீட் அன்வர் மகளை இழந்த சோகத்திலிருந்து மீள முடியாமல் தவிப்பதனை, அவருடைய ஆட்டங்களில் காணக்கூடியதாக இருந்தது. இருந்தாலும் அன்வர் தன்னுடைய பங்கினைச் சரியாகச் செய்திருக்கிறார் என்றே கூறக்கூடியதாக இருக்கின்றது. பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் பேச்சாளர் ஒருவர் கருத்துக் கூறுகையில், அணியினைப் புனருத்தாரணம் செய்யவேண்டிய தேவை இருப்பதனையும், அணித் தலைவர் ஒருவரை புதிதாகப்போடவேண்டிய தேவை இருப்பதனையும் ஏற்றுக் கொண்டதைக் காணகூடியதாக இருக்கின்றது. இன்சமாம் உல் ஹக் போன்றோரைத் தொடர்ந்து TEAM இல் வைத்திருக்க வேண்டுமா? ஏனெனில், அவர் ஐந்து ஆட்டங்களில் பெற்ற ஓட்டங்கள் மொத்தமாக 19 மட்டுமே. நாங்கள் கடினமாக ஆடினோம். ஆனால், மைதானம் எங்களுக்குக் கை கொடுக்கவில்லை என்று WAQUAR கூறியது ஒரு நகைப்புக்குரியதான விடயம். அத்துடன், அவர்களுடைய பயிற்றுநர் ரிச்சட் பைபஸ் இற்கும் சில அணி வீரர்களுக்குமிடையே பலத்த கருத்து பேதங்கள் இருந்ததையும் PCB ஒத்துக்கொள்கின்றது.



மியான்டாட் - மீண்டும் ஒருமுறை?

இதற்கிடையில் வக்காருக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தால் என்ன என்று பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அதிகாரிகள் சிலர் நினைப்பதாகவும், சில செய்திகள் தெரிவிக்கின்றன.

நான்கு பேர் கொண்ட குழு ஒன்று இந்தத் தோல்விகளை விசாரித்து வருகின்றது. அது மார்ச் 23 இற்கு முன், தம்முடைய அறிக்கையை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால், அணியின் முகாமையாளர் சகாரியர் கான், இந்த அணியினைக் கடுமையாகச் சாடியிருக்கின்றார். இப்போது விளையாடுபவர்கள், பாகிஸ்தான் அணியின் பழைய ஆட்டக்காரர்கள் போல இல்லை. இவர்கள் கொடுத்த EXTRA ஓட்டங்களை மட்டுப்படுத்தியிருந்தாலே, அணி பல இக்கட்டுக்களில் இருந்து தப்பியிருக்கும் என்றும் கான் கூறினார்.

பாகிஸ்தான் அணியின் பழைய ஜாம்பவான் மியான்டாட், அணியின் பயிற்றுநராக இருந்த காலப்பகுதியில் இந்த அணி பெற்ற வெற்றிகள் கட்டுக்கடங்கா. ஆனால், மியான்டாட்டுடைய கடும்போக்கு சில வீரர்களுக்குப்பொறுக்கவில்லை. அது மட்டுமல்ல, மேலும் சில அரசியல் காரணங்களுக்காக இவர் பயிற்றுநர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். ஆனால், பாகிஸ்தான் அணிக்கு இவர்தான் சரி. எது எப்படியிருப்பினும் பெரும் சுழல் காற்றுக்குள் சிக்கியுள்ள பாகிஸ்தான் அணி மீண்டுவருமா? PAK. ARE YOU READY TO GO TO SHARJAH?

## நாளும் ஒரு வினா

**2003 உலகக்கிண்ணப்போட்டிகளில் தவறவிடப்பட்ட 3 சதங்கள் யாவை?**

**கில் கிறிஸ்ட் 99, சச்சின் 98, சச்சின் 97.**

**உலகக் கிண்ணக் கிரிக்கெட் அனுசரணை**

## குளிக்கப்போய் சேற்றைப் பூசுவதா?

உலகில் உள்ள சிறப்புப்பெற்ற விளையாட்டுக்களில் துடுப்பாட்டமும் ஒன்றாகும். இவ்விளையாட்டு, மற்ற விளையாட்டுக்களிலிருந்து வேறுபடுவதற்குக் காரணம், அதில் பண்ணாட்டுத் தன்மையாகும். அத்துடன், இவ்விளையாட்டின் சீரிய அம்சங்களினால், இது கனவான்களின் விளையாட்டு (GENTLEMENS GAME) என்றும், நேர்த்தியான விளையாட்டு (GAME OF ELEGANCE) என்றும் உலகளவில் அங்கீகாரம் பெற்றுள்ளது.

இது இவ்வாறிருக்க, மற்றுமொரு விடயம் -துடுப்பாட்டத்திற்கு ரசிகப்பெருமக்கள் தரும் 'நச்சரிப்பாகும். இவர்கள் சில சமயங்களில் விளையாட்டையே கொச்சைப் படுத்தி விடுவதுண்டு.



வேலி என்பது வேதனை அல்லவா?

ஆட்டத்தின்போது, ஆடுகளததினுள் நுழைவது, எல்லைக் கோட்டிற்கு (BOUNDARY LINE) அருகில் நின்று துடுப்பாட்ட வீரர்களை நையாண்டி செய்வது, ஆத்திர மூட்டும் வகையில் பேசி எரிச்சலூட்டுவது போன்ற போக்குகளும் உள்ளன. இந்த விடயத்தில் முதலாவது இடத்தில் இருப்பது நமது யாழ்ப்பாணம்தான் என்றால் மிகையாகாது.

யாழ்ப்பாணத்தில் கல்லூரிகளுக்கிடையிலான மாபெரும் துடுப்பாட்டங்களில், அதுவும் குறிப்பாக வருடா வருடம் நடைபெறும் ஒரு மாபெரும் துடுப்பாட்டத்தில், சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் ரசிகர்கள் போக்கு, பண்பட்ட ரசிகர்களின் போக்கிற்கு நேர்மாறாகவே இதுவரை காலமும் உள்ளது. ரசிகர்கள் தமது அணிக்காக தெய்வ ஆசி வேண்டி, எறியகத்தில் (PITCH) பிரதிஷ்டை செய்வதும், தேங்காய் உடைப்பதும் மற்றும் கற்பூரம் எரிப்பதும் சர்வ சகஜம். இதைக் கண்டும் காணாதது போல் தள்ளி விட்டு மெதுவாக தப்பித்துவிடுகிறது, பொறுப்பான நிர்வாகம். வேண்டுமானால் சம்பந்தப்பட்ட அணி ரசிகர்கள், அதனை அருகிலுள்ள கோயில்களிலும் தேவாலயங்களிலும் செய்வது மேலானதுதானே. ரசிகர்களில் மிகத் தீவிரமானவர்களும், தாம் சார்ந்த கல்லூரிகளின் அணிக்கு மிக ஆதரவான நிலையை உருவாக்கும் நோக்கத்துடன், குழப்பநிலையை உருவாக்குவதில் பெரும்பான்மையானவர்களும் பழைய மாணவர்கள்தாம். வீரரொருவர் சதம் அல்லது அரைச்சதம் அடித்தவுடன் ஆடுகளத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்து, சம்பந்தப்பட்ட வீரருக்கு கைலாகு கொடுப்பதுடன் மற்றும் சோடா, குளிர்பானம் இத்தியாதிகள் வழங்கப்படுகின்றன. இங்கேதான் பிரச்சினை. சோடாவில் என்ன கலந்துள்ளதோ யார் கண்டார்கள்!

இது இவ்வாறிருக்க, ஒரு சிலரின் சௌகரியத்திற்காகவும், தமது உணர்வு வெளிப்பாட்டிற்காகவும், யாழ்ப்பாணத்தில் மாபெரும் துடுப்பாட்டங்களில் கையாளப்படும் இவ்வழக்காற்றினால், விளையாட்டு இயல்புநிலை பாதிக்கப்படுவதோடு, விளையாட்டுக்குரிய குணாம்சங்கள் படிப்படியாகக் குறைந்து, மாபெரும் துடுப்பாட்டம் ஒரு வருடாந்தக் கேளிக்கையாக மாறிவிடுமோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

இதுதவிர, ஆடுகளத்திற்கு வெளியில், அதைச் சுற்றி நடக்கும் ஆர்ப்பாட்டங்கள் ஒருவகை. இந்த மாபெரும் துடுப்பாட்டங்களின்போது, ரசிகர்கள் கோஷ்டி பிரிந்து, அடித்தாடுபவரின் (STRIKER) துடுப்புக்கருகிலோ, அல்லது இலக்குக் கட்டையையோ (WICKET) பந்து கடக்கும்போது, "ஹோ" என்று குரல் எழுப்புவதும், தமது அணிக்கொடி மற்றும் 'சீருடையுடன்' கர்ணகடூரமாகத் தகர டப்பாவில் அடிப்பதும் நிச்சயம் ஆட்டத்தைப் பாதிக்கும் செயல்களாகும்.

மேலும், ஒவ்வொரு அணியையும் சார்ந்த ரசிகர்கள் ஆடிப்பாடி மேளதாளத்துடன ஆடுகளத்தைச்சுற்றி வலம் வருவதும் உண்டு. கையில் கொடிதடிகள் வேறு. இவ்வாறான சம்பவங்கள் துடுப்பாட்ட வீரர்களையே தடுமாற வைக்கக் கூடிய மிகவும் சர்ச்சைக்குரிய சமாச்சாரங்கள் ஆகும்.

ஒரு வீரரின் கவனம் கலையும் சந்தர்ப்பங்களில், அவர் நிதானத்துடன் களத்தடுப்பிலோ, பந்து எறிவதிலோ அல்லது துடுப்பெடுத்தாடுவதிலோ ஈடுபடமுடியாது.

தாம் சார்ந்த பக்கம் மீதான வெறியால், ஆடுகளத்தினுள் அத்துமீறிப் பிரவேசிப்பவர்களைக் காவல் துறையினர் பிடித்து, ஆட்ட முடிவில் விடுதலை செய்யும் கறை படிந்த சம்பவங்களும் முன்பு நடந்துள்ளன. வெற்றி தோல்வி என்று வெறிபிடித்துத் தள்ளாடாமல் தாமே சுயகட்டுப்பாட்டை ஏற்படுத்துவது விரும்பத்தக்கது.

துடுப்பாட்டம் - சட்ட விதிகளுக்கும் அதேவேளை, மரபிற்கும் மற்றும் ஆட்ட உணர்வுகளுக்கும் ஏற்ப ஆடப்படும் ஓர் ஆட்டமாகும். நடைபெறும் உலகக்கிண்ணப் போட்டியில், தென்னாபிரிக்கா எதிர் இலங்கை ஆட்டத்தின்போது, தென்னாபிரிக்க வீரர் ஒருவர் ஆடுகளத்தினுள் பிரவேசிக்க மத்தியஸ்தர் அனுமதிதர மறுத்துள்ளார். இது எங்களூர் ரசிகர்களுக்கு நல்லதோர் முன்னுதாரணமாகும்.

**ரி.ஜெகநாதன்**
**பணிப்பாளர், யாழ். கிரிக்கெட் அக்கடமி**

அதேவேளை, மாபெரும் துடுப்பாட்டத்தின் ஏற்பாட்டாளர்களும் இச்சீரழிவுகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுதல் அவசியமாகின்றது. பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர் மற்றும் நலன்விரும்பிகளின் ஆதரவுடன் இதனைச் சாத்தியமாக்கலாம் என்பது உறுதி.

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் - 2003

### சிம்பாப்வே எதிர் கென்ய அணி

**சிம்பாப்வே அணி**

| | | |
|---|---|---|
| விஷாட் | C ஒட்டினோ b சுஜி | 05 |
| கம்பல் | LBW b சுஜி | 07 |
| ஏ. பிளவர் | b ஒடயோ | 63 |
| ஜி. பிளவர் | C ஒட்டினோ b சுஜி | 07 |
| டைபூ | C ஒட்டினோ b ஒபுய | 03 |
| இப்ராஹிம் | C ஒட்டினோ b ஒபுயா | 13 |
| பிளிக்நட் | Run out | 04 |
| ஸ்ரீக் | C ஷா b ஒபுயா | 00 |
| மெரில்லியர் | b டிக்கோலோ | 21 |
| ஒலங்கா | C ஒடும்பே b டிக்கோலோ | 03 |
| ஹொண்டோ | N0t out | 00 |
| உதிரிகள் | | 07 |
| சகல விக்கெட் இழப்புக்கு (44.1 ஓவர்கள்) | | 133 |

**பந்து வீச்சு - கென்ய அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| சுஜி | 08 | 2 | 19 | 3 |
| ஒடயோ | 10 | 0 | 43 | 1 |
| ஒங்கொண்டோ | 05 | 2 | 16 | 0 |
| ஒபுயா | 10 | 0 | 32 | 3 |
| கரிம் | 09 | 0 | 20 | 0 |
| டிக்கோலோ | 2.1 | 0 | 02 | 2 |

**கென்ய அணி**

| | | |
|---|---|---|
| ஒட்டினோ | LBW b ஒலங்கா | 19 |
| ஷா | Run out | 14 |
| டிக்கோலோ | C ஸ்ரீக் b பிளிக்நட் | 02 |
| ஒடயோ | N0t out | 43 |
| ஒடும்பே | N0t out | 38 |
| உதிரிகள் | | 19 |
| 3 விக்கெட்டுக்களை இழந்து (26 ஓவர்கள்) | | 135 |

**பந்து வீச்சு - சிம்பாப்வே அணி**

| | O | M | R | W |
|---|---|---|---|---|
| ஸ்ரீக் | 06 | 0 | 24 | 0 |
| பிளிக்நட் | 09 | 1 | 36 | 1 |
| ஒலங்கா | 04 | 0 | 21 | 1 |
| ஹொண்டோ | 03 | 1 | 14 | 0 |
| ஜி. பிளவர் | 03 | 0 | 27 | 0 |
| மெரில்லியர் | 01 | 0 | 09 | 0 |

சிம்பாப்வேயுடனான சுப்பர் சிக்ஸ் ஆட்டத்தில் கென்ய அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

இந்த வெற்றியின் மூலம் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற கென்ய அணி, அரையிறுதியில் இந்திய அணியுடன் மோதவுள்ளது.

இலங்கையின் நம்பர் 01 கம்பனி "பிஸினஸ் ருடே" சஞ்சிகை (Business Today Magazine).
இலங்கையின் தலைசிறந்த வங்கி- 'குளோபல் பைனான்ஸ், த பாங்கர் சஞ்சிகை' (Global Finance, The Banker Journal)
எமது மிகப்பரந்த கணனி வலை அமைப்புக்குள் (Comnet) யாழ்ப்பாணமும் இணைந்துள்ளது.
கொமர்ஷல் வங்கி
உங்கள் நலமே எங்கள் நோக்கம்

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# விடுதலைப்புலிகளின் கப்பல் மூழ்கிய சரியான இடம் எது?

## கடற்படையிடம் கண்காணிப்புக்குழு கேட்கிறது

விடுதலைப் புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட சரியான இடம் எது என்பதைக் கடற்படையினர் தெளிவுபடுத்தும்படி கண்காணிப்புக் குழு கேட்டுள்ளது.

புலிகளின் கப்பல் மூழ்கடிக்கப்பட்ட இடம், இலங்கைக் கரையில் இருந்து 240 கடல் மைல் தொலைவில் என்று முதலில் கடற்படையினர் கூறியிருந்தனர். பின்னர் 220 கடல்மைல் தொலைவில் சம்பவம் நடந்ததாகக் கடற்படையினரால் கூறப்பட்டது.

இறுதியாக 185 கடல்மைல் தொலைவில்தான் கப்பல் மூழ்கடிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. கடற்படையினரின் தகவல்கள் முரண்படுவதாலேயே, சரியான தகவலைத் தருமாறு கண்காணிபபுக்குழு கோரியுள்ளது.

இலங்கையின் பொருளாதாரக் கடல் எல்லை 12 கடல் மைலில் இருந்து, 200 கடல் மைல்வரை உள்ளதென்பதால், அதற்கு வெளியே கப்பல் மூழ்கடிக்கப்படடிருந்தால், சர்வதேச சட்டப்படியே நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கண்காணிப்புக்குழு தெரிவித்தது.



கண்காணிப்புக் குழுத் தலைவரை வரவேற்கும் பாலா. அருகே. தமிழ்ச்செல்வன்.



விடுதலைப் புலிகளைச் சந்திக்கும் கனேடிய உயர்மட்டக் குழுவினர்.

# மூழ்கிய கப்பலின் சிதைவுகள் 3400 மீற்றர் ஆழ்கடலில்!

## கடற்படை வட்டாரங்கள் தெரிவிப்பு

தம்மால் தாக்கி அழிக்கப்பட்ட புலிகளின் கப்பல், கடலில் 3400 மீற்றர் ஆழத்தில் சிதைவுண்டு கிடப்பதாகக் கடற்படை தெரிவித்துள்ளது. இது குறித்துக் கருத்துத் தெரிவித்த கடற்படை வட்டாரங்கள்,

தாக்கியழிக்கப்பட்ட கப்பலுடன் கடற்படை தொடர்பு கொண்டபோது, முதலில் லிபியாவிலிருந்து கொல்கத்தாவுக்குச் செல்வதாகவும் பின்னர் கென்யாவிலிருந்து பங்களாதேஷ் செல்வதாகவும் கூறப்பட்டது.

கப்பலை சோதனையிட கடற்படையினர் அனுமதி கோரியபோது, கப்பல் ஏஜென்டின் அனுமதியின்றிச் சோதனையிட அனுமதிக்க முடியாது எனத் தமிழிலேயே பதிலளிக்கப்பட்டது.

கப்பல் மீது 60 மி.மீ, 40 மி.மீ பீரங்கிகளால் கடற்படையினர் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து தீப்பிடித்து எரியத் தொடங்கிய கப்பல், பிற்பகல் 3.09 மணிக்கு முற்றாக மூழ்கியது.

மூழ்கிய புலிகளின் கப்பல் 400 முதல் 500 தொன் எடையுள்ளதென்றும் 60 அடி நீளமானதென்றும் கடற்படை தெரிவித்துள்ளது.

# புலிகளின் அலுவலகத்தின் மீது வெளிச்சம் பாய்ச்சிய படையினர்

விடுதலைப் புலிகளின் நெல்லியடி அரசியற்துறை அலுவலகத்தின மீது, இராணுவத்தினர் வெளிச்சம் பாய்ச்சி அச்சுறுத்திய சம்பவம் நேற்று இரவு நடைபெற்றுள்ளது.

பவள் வாகனத்தில் வந்த இராணுவத்தினர், அந்த அலுவலகத்திற்கு முன்னால் தரித்து நின்று வெளிச்சம் பாய்ச்சியுள்ளனர். சிறிது நேரம் தரித்து நின்றதன் பின்னர், அங்கிருந்து அகன்று சென்றுவிட்டனர்.

## படையினரைக் கட்டுப்படுத்த முடியாத...

நேற்று மாலை 4 மணி முதல் 6 மணிவரை இச்சந்திப்பு நடைபெற்றது. இதில், புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோர் பங்குபற்றினர். கண்காணிப்புக்குழு தரப்பில் மேஜர் ஜெனரல் ரெலவ்சன் மற்றும் சட்ட ஆலோசகர் உட்பட ஐவர் கொண்ட குழு இச்சந்திப்பில் கலந்து கொண்டது.

இச்சந்திப்பில் பேசப்பட்ட விடயங்கள் பற்றி ஊடகவியலாளரிடம் பாலசிங்கம் மேலும் தெரிவிக்கையில்,

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு, கப்பல் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இதுவரை எவ்வித அறிக்கையும் விடவில்லை. எனினும், நேற்று அவர்கள் பாதுகாப்பு அமைச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், கடற்படைத் தளபதி ஆகியோரைச் சந்தித்து, அவர்களது தரப்புக் கருத்தைப் பெற்றுள்ளனர். இன்று (நேற்று) வந்து எமது விளக்கத்தைப் பெற்றுளளனர்.

எமது விளக்கத்தை அடிப்படையாக வைத்தும், அரசின் கருத்தை அடிப்படையாக வைத்தும் விசாரணை நடத்தி, இறுதியாக ஒரு தீர்க்கமான அறிக்கையை வெளியிடவுள்ளனர். இந்த அறிக்கை முக்கியமானது.

இன்றைய (நேற்றைய) பேச்சுக்களில் நாம் எமது நிலைப்பாட்டை விளக்கினோம். இச்சம்பவம் 250 கடல்மைல்களுக்கு அப்பால் நடந்துள்ளது. இது சர்வதேச கடற்போக்குவரத்துப் பாதை. எனவே, இங்கு ஓர் வர்த்தகக் கப்பலைத் தடுத்துநிறுத்தி தாக்குதலை நடத்துவது சர்வதேச சட்டத்துக்கு மாறானது. போர்நிறுத்த ஒப்பந்தத்தை மீறுவது. இப்படியான சம்பவம் இதுவரை நடக்கவில்லை. இது கடற்படையினரின் அடாவடித்தனமான ஆத்திரமூட்டும் போர்ச் செயல் என்றே நாம் கருதுகிறோம். இதை கண்காணிப்புக்குழுவிற்கு விளக்கினோம்.

இதில் மூன்று விடயங்களை நாம் குறிப்பிடவேண்டும்.

முதலாவது, இச்சம்பவம் நடைபெற்றுக்கொண்டிருந்தவேளை நாம் கண்காணிப்புக்குழுவின் தலைவரிடம் கூறியபோது, அவர், எம்மிடம் இச்சம்பவம் 220 கடல்மைல்களுக்கு அப்பால் நடைபெறுவதாகக் கூறினார். இலங்கை அரசு கண்காணிப்புக்குழுவிடம் கொடுத்த அறிக்கையில் இலங்கையின் கடல் எல்லை 200 மைல் - அதற்கும் அப்பால் நடந்துள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறது. அந்தப் பகுதி சர்வதேச கடற்பரப்பாதலால் சர்வதேச சட்டம் அங்கு மீறப்பட்டிருக்கிறது.

இரண்டாவது - கடலில் அசம்பாவிதம் நடந்தால் இதுவரை கடற்படை கண்காணிப்புக்குழுவை அவ்விடத்துக்கு அழைத்துச்செல்வது வழக்கம். ஆனால், இம்முறை கண்காணிப்புக் குழுவை கடற்படை அழைக்கவில்லை. எனவே, இரகசியமாக, கண்காணிப்புக்குழு அறியாமல், எமது கப்பல் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதை அவர்களுக்குச் சுட்டிக்காட்டினோம்

இப்போது கடற்படை கூறுகிறது - நாம் ஆயுதம் கடத்தினோம். கப்பலில் இருந்தவர்கள் கடற்படை மீது தாக்குதல் நடத்தினர். நாம் பதில் தாக்குதல் நடத்தினோம் எனக் கூறுகிறது. கண்காணிப்புக் குழுவை ஏன் கடற்படை அழைக்கவில்லை என நேற்றைய சந்திப்பில் அவர்களிடம் கேட்டோம்.

அடுத்தது - இச்சம்பவம் குறித்து கடற்படையின் ஒரு தரப்பு வாதமே இருக்கிறது. எமது தரப்பைக் கூற அந்த போராளிகள் இன்று உயிருடன் இல்லை. எனவே அக்கப்பலில் கொடி, பதிவு இருந்ததா என்பது பற்றிச்சொல்ல முடியாது. கப்பல் எரிந்து மூழ்கிவிட்டது.

அரசு இவ்விடயத்தில் தன்னிச்சையாக நடந்தமையால், கண்காணிப்புக்குழுவின் செயற்பாடு அர்த்தமற்றதாகி விட்டது என அரசிடம் எடுத்துக்கூறும்படி அவர்களிடம் கேட்டோம். போர்நிறுத்த ஒப்பந்தத்தில் 1.3 சரத்து, கடற்படை தனது பிரதேச ஒருமைப்பாட்டை, இறையாண்மையை நிலைநாட்டலாம் என்கிறது. ஆனால், புலிகளுடன் மோதக்கூடாது என்றும் அது கூறுகிறது. எனவே, இவ்விதியை கடற்படை அப்பட்டமாக மீறியுள்ளதையும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

எமது நிலைமையை கண்காணிப்புக்குழுவிடம் தெளிவாக்கிவிட்டோம். அவர்களும் அரச தரப்புடன் பேசி, தாம் இறுதியாக ஓர் அறிக்கையை வெளியிடுவதாகக் கூறினார்கள். அந்த அறிக்கை நேர்மையான, இறுதித் தீர்மானமாக, இறுதித் தீர்ப்பாக இருக்க வேண்டும் என நாம் அவர்களைக் கேட்டுள்ளோம்.

பேச்சுவார்த்தை மேசையில் பரஸ்பர நல்லுறவு நிலவினாலும், களநிலவரம் மோசமாக உள்ளது. இராணுவம் தமது பகுதிகளை விட்டு விலக மறுக்கிறது. உயர்பாதுகாப்பு விவகாரம் தீர்க்கப்படாமல் இருக்கிறது. போராளிகள் தாக்கப்படுகின்றனர். அமைதி நிலவினாலும் இயல்பு நிலை இல்லை. இதற்குப் படையினரே காரணம். இந்தப் படைக்குப் பின்னால் ஜனாதிபதி இருக்கிறார்.

இந்நிலையில் பேச்சுக்கள் சுமுகமாக நகர்வது சாத்தியமில்லை. பரஸ்பர நம்பிக்கையில்லாப் பேச்சில் அர்த்தமில்லை. இராணுவத்தையும் கடற்படையையும் கட்டுப்படுத்தும் அதிகாரம் இல்லாத அரசுடன் பேசியும் பலன் இல்லை. இது எமது தலைமைப்பீடத்திற்கும் போராளிகளுககும் பெரும் அவநம்பிக்கையை, ஆத்திரத்தைக் கொடுத்துள்ளது. மக்களிடையே விரக்தியை ஏற்படுத்துகிறது. இயல்புநிலை இன்னமும் திரும்பவில்லை. இந்நிலையில் இப்படியான ஆத்திரமூட்டும் செயல்கள் பேச்சுகளுக்குப் பங்கம் தரும். என்ன மாதிரியான பாதிப்பு என்பது பற்றி இப்போது கூறமுடியாது. இதுபற்றி எமது தலைமை யோசித்து வருகிறது எனக் குறிப்பிட்டார்.

### நோர்வே...

தெரிவித்தார்.

ஹெல்கிசன் இலங்கை விஜயத்தை முடித்துக்கொண்டு, அடுத்த சுற்றுப் பேச்சுக்களுக்கான ஆயத்தங்களைச் செய்வதற்காக ஜப்பான் பயணமாவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

### தற்போதைய...

இராணுவம் போர் நடவடிக்கையை மேற்கொண்டால் அவர்களின் பாதுகாப்பைக் கருதியும் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளோம். நிலைமை சீரடைந்ததும், மீண்டும் அவர்களை திருப்பியனுப்ப முடிவு செய்துள்ளோம் என்றார்.

### ஐ.நா....

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா, தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன், திருமதி அடேல் பாலசிங்கம் ஆகியோரை இக்குழுவினர் சந்தித்தனர்.

பின்னர் இயன் மார்ட்டின் - கிளிநொச்சியில் உள்ள தமிழீழ மாவட்ட நீதிமன்றம், மேன்முறையீட்டு நீதிமன்றம் ஆகியவற்றுக்கு நேரில் விஜயம் செய்தார். அங்கு அவர் இவற்றின் செயற்பாடுகளை அவதானித்தார். நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பராவையும் மற்றும் நீதியாளர்களையும் அங்கு இயன் மார்ட்டின் சந்தித்துக் கலந்துரையாடினார். மகளிர் உரிமைகள், சிறுவர் உரிமைகள் போன்ற விடயங்கள் குறித்தும், மனித உரிமைகள் நீதித்துறையில் எவ்வாறு பேணப்படுகின்றன என்பது குறித்தும் இயன் மார்ட்டின் அறிந்து கொண்டார்..

விடுதலைப் புலிகளின் நீதித்துறை ஆலோசகர்களான முன்னாள் நீதிபதி ஏகநாதன், சட்டத்தரணி கோடீஸ்வரன் ஆகியோரையும் இயன் மார்ட்டின் சந்தித்தார்.

# மீனவர் ஊடுருவலுக்கு பின்னால் சில சக்திகள் இயங்குகின்றன

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

(கிளிநொச்சி)

கடற்படை - பேச்சுக்களைக் குழப்ப அக்கறையுடன் செயற்படுகிறது. இந்திய மீனவரை எமது எல்லைக்குள் அனுமதிப்பதுடன் அவர்களை ஊடுருவச் செய்து எம் மீனவர்களைத் தாக்கியும், வலைகளை அறுத்தும் அவர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தச் செய்கின்றனர்.

இந்தச் சதியில் அபபாவிகளான தமிழக மீனவர்கள் செயற்படுவதையிட்டு கவலையடைகிறோம். இதற்குப் பின்னால் சில சக்திகள் செயற்படுகின்றன என, கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பில் தெரிவித்தார்.

இதில் நாம் கவனமாக செயற்படுகின்றோம். எமது மீனவர்கள் பாதிக்கப்படுவதை நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. கடற்படையை அரசால் கட்டுப்படுத்த முடியாதநிலை இருக்கிறது. எமது கடற்படையை இதில் தலையிடச் செய்ய விரும்பவில்லை. இந்த மீனவர் விவகாரத்துக்குப் பின்னால் நிற்பவர்களின் நோக்கம், இந்தியாவையும் புலிகளையும் முரண்படச் செய்வதற்கே. இதனமூலம் பேச்சைக் குழப்புவது அவர்களின் திட்டம். இச்சக்திகள் கொழும்பிலும் வேறு சில இடங்களிலும் இருப்பதாக நாம் சந்தேகிக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நவீன கடற்படைக்கப்பல் அமெரிக்கா வழங்கும்

(கொழும்பு)

அதிநவீன கடற்படைக் கப்பல் ஒன்றை அமெரிக்கா இலங்கைக் கடற்படைக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது. ஹெலிகொப்ரர்கள் இறங்கக்கூடிய வசதிகளைக் கொண்டதாக இக்கப்பல் இருக்கும்.

அமெரிக்கத் தூதரகம் விடுத்த செய்திக்குறிப்பில், இக்கப்பல் நீண்ட நாட்களுக்கு கடலில் தரித்துநிற்கக் கூடிய வசதிகொணடது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பரீட்சை - தவணை -1
2003 1ஆம் தவணைப் பரீட்சை 16.03.03 (ஞாயிறு) ஆரம்பம்.
1ஆம்,2ஆம்,3ஆம் தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்
(பரீட்சையும் எழுதலாம்)
நல்லூர் சயன்ஸ் அக்கடமி
(முருகன் கோயில் முன்பாக) 282

### கப்பல் அழிப்பு....

முறையில் தீர்க்கப்படுகின்றன. எவ்வாறாயினும், புரிந்துணர்வு உடன்படிக்கையை முழுமையாக அமுல்படுத்துவதில் ஏற்படுகின்ற சிக்கல் நிலை தொடர்பாக, ஜப்பானில் நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையில் பேசப்படும் என்றும் பிரதமர் கூறினார். அரசியல் தீர்வு காண்பதற்கான காலகட்டத்திற்குள், அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் வந்திருக்கின்றனர். எனவே, முரண்பாடுகளைப் பெரிதுபடுத்தி, பிரச்சினைகள் வளருவதற்கு வழிவகுக்கக்கூடாது என்றும் பிரதமர் கூறினார்.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 13.03.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.